விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

சமூக அக்கறையுடன் மீண்டும்
உங்களுடன் உங்களுக்காக!
www.yallaruvi.com
YARLARUVI
LIVE WITH NATURE
(4695)

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 06 சனிக்கிழமை (21.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 338

வவுனியா சிதம்பரபுரம் பகுதியில்

## சமரசம் பேச மனைவி வீட்டுக்கு சென்ற கணவன்

### மனைவி உட்பட 3 பெண்களுக்கு கத்திக்குத்து

(வவுனியா)

வவுனியா, சிதம்பரபுரம், கற்குளம் 4ஆம் பகுதியில் குடும்ப சண்டை காரணமாக கத்திக்குத்துக்கு இலக்காகிய மூன்று பெண்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் 19

## மாவீரர் நாளுக்கு தடைவிதிக்க மறுத்து மல்லாகம் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வர்த்தமானி அறிவித்தல்களில் கூறப்பட்ட தடை செய்யப்பட்ட இயக்கங்களின் சின்னங்கள், கொடிகள் உள்ளிட்டவற்றை பயன்படுத்தாமலும் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறாமலும் நிகழ்வுகளை நடத்த முடியும் என்று தெரிவித்து நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு தடை விதிக்க மறுத்து மல்லாகம் நீதிமன்ற நீதவான் கட்டளை வழங்கியுள்ளார்.

மாவீரர் நாள் நிகழ்வுகள் வரும் 27ஆம் திகதி வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம், கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயம் உட்பட காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் மாவீரர் நாள் நினைவேந்தலை 19

# மாவீரர் நாளுக்கு தடைவிதிக்க முடியாது

## வழக்கை தள்ளுபடி செய்து யாழ்.மேல் நீதிமன்றம் தீர்ப்பு

**(யாழ்ப்பாணம்)**

**மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு தடை விதிக்க முடியாது. தேசிய பாதுகாப்புத் தொடர்பான விடயத்தை விசாரிக்கும் அதிகாரம் மாகாண மேல் நீதிமன்றுக்குக் கிடையாது எனத் தெரிவித்து நினைவேந்தலைத் தடுப்பதற்கு எதிரான மனுக்களை நிராகரித்து யாழ்.மேல் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.**

நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நினைவேந்தல் நிகழ்வைத் தடைசெய்யக் கூடாது எனக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை யாழ். மேல் நீதிமன்றத்தில் நேற்று இடம்பெற்றது.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான குறித்த மனுக்களை மாகாண நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட நீதிமன்றத்தில் விசா 19

### துன்னாலையில் சுற்றிவளைப்பு 4 பேர் கைது

(கரணவாய்)

யாழ்.வடமராட்சி துன்னாலை - வேம்படி பகுதி நேற்று அதிகாலை 5 மணி தொடக்கம் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப் படையினர் மற்றும் 19

நாடு முழுவதும்

### சனி, ஞாயிறு ரயில் சேவைகள் இடம்பெறாது

(கொழும்பு)

நாடு முழுவதுமான அனைத்து பயணிகள் தொடருந்து சேவைகளும் இன்று சனி மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை இடைநிறுத்தப்பட்டுள்ள 19

சாவகச்சேரியில் வீடு புகுந்து

## 4 மோட்டார் சைக்கிளில் வந்த குழு அட்டகாசம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - கெருடாவில் பகுதியில் உள்ள வீடொன்றினுள் இரவு 19

### மாவீரர் வாரம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ இலட்சியத்துக்காகத் தமது இறுதி மூச்சு வரை போராடி, களமாடி வீரச்சாவடைந்த வீரமறவர்களை நினைவு 19

மாவீரர் நாள் விவகாரம்

## வலி.கிழக்கு தவிசாளருக்கு நீதிமன்று அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோ 19

### நாவாந்துறையில் தீக்காயத்துக்குள்ளான குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தீக்காயத்துக்குள்ளான குடும்ப 19

வட மாகாண உணவகங்களில்

## உட்கார்ந்து உணவு உட்கொள்ள அனுமதி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் உணவகங்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் சில இன்று சனிக்கிழமை தொடக்கம் தளர்த்தப்படுவதாக மாகாண 19

## போரில் உயிரிழந்தவர்களை வீடுகளில் நினைவுகூர நீதிமன்றம் அனுமதி

### எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

போரில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் தங்களின் வீடுகளில் 19

மேலும் ஒருவர் பலி

## 20 ஆயிரத்தை அண்மித்த கொரோனாத் தொற்றாளர்கள்

### நேற்றும் +435 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் கோவிட் - 19 நோயால் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார் 19

## கிளிநொச்சி, முல்லை நீதிமன்றங்களும் மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு தடை

### 41 பேருக்கு எதிராக தடையுத்தரவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு நீதிமன்ற தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கனகபுரம், முழங்காவில் மற்றும் தேராவில் மாவீரர் துயிலும் இல்லங்களில் 19

# வலி. தென்மேற்கு பிரதேச சபை கூட்டத்தில் முரண்பாடு

## உறுப்பினர் ஒருவரால் தண்ணீர் கிளாஸ் எறிந்து உடைப்பு

(அராலி)

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் சபைக் கூட்டத்தில் ஏற்பட்ட முரண்பாடு காரண மாக உறுப்பினர் ஒருவரால் தண்ணீர் கிளாஸ் எறிந்து உடைக்கப்பட்டது.

தவிசாளரின் தலைமை யில் சபை அமர்வு நேற்று காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகியது. சபை ஆரம்பி த்து சிலமணி நேரத்தில் மின் குமிழ் பொருத்துதல் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் உறுப்பினருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. இத னைத் தொடர்ந்து தவிசாளர் சபையினை கால வரையறை யின்றி ஒத்தி வைத்துவிட்டு சபையிலிருந்து வெளியேறி னார்.

ஈ.பி.டி.பி ஒரு கொலைகாரக் கட்சி என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் கூறியதால் ஈ.பி.டி.பி. கட்சியின் பெண் உறுப்பினர் ஒருவர் தண்ணீரை வீசினார். இதனைத் தொடர்ந்து அதே கட்சியின் இன்னொரு உறுப் பினர் தண்ணீர் கிளாஸினை எறிந்துடைத்தார். (ம-03,104)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

ஏழாலையூர் நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் நாளை ஞாயிற் றுக்கிழமை காலை 09 மணி முதல் ஏழாலை மேற்கு உதயசூரியன் சனசமூக நிலை யத்தில் நடைபெறவுள்ளது.

"இது விதைகள் துளிர்வி டும் மாதம்... நம் உதிரத்தால் உயிர் காப்போம் வாரீர்" எனும் தொனிப் பொருளில் இடம்பெ றும் குறித்த இரத்ததான முகா மில் குருதிக் கொடையாளர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு உயிர் காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இர த்ததான முகாம் ஏற்பாட்டாள ர்கள் அழைப்பு விடுத்துள்ள னர்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிக் குருதிக் கொடையா ளர்களைக் கலந்து கொள்ளு மாறும் கேட்டுக் கொள்ளப்பட் டுள்ளது. (ம-03,18)

# பூநகரி பிரதேச சபை

## ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு

(முறிகண்டி)

கிளிநொச்சி பூநகரி பிரதேச சபையின் ஊழியர்கள் நாளை மறுதினம் திங்கள் முதல் தங்களுடைய பிரச்சினைக ளுக்கு நிரந்தர தீர்வு கிடைக் கும் வரை பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்து ள்ளனர்.

இது தொடர்பில் பூநகரி பிர தேச சபையின் ஊழியர் நலன் புரி சங்கத்தினர் தெரிவிக்கை யில்,

பூநகரி பிரதேச சபையில் தவிசாளர் மற்றும் செயலாள ருக்கிடையில் அதிகார போட்டி ஏற்பட்டுள்ளது. செயலாளரின் அதிகாரத்தைத்தான் மீள பெற்றுக்கொள்வதாக கடந்த வாரம் தவிசாளர் கடிதம் மூலம் அறிவித்திருந்தார். இதன் பின்னர் நிர்வாகத்தில் பல் வேறு நெருக்கடிகள் ஏற்பட் டுள்ளது. சபையின் செயற்பா டுகள் முடங்கும் நிலை ஏற்பட் டுள்ளது. கொடுப்பனவுகளுக் கான காசோலைகளில் கையொப்பம் இடுவது, பணி யாளர்களை நிர்வாக ரீதியான நடவடிக்கைகளில் வழிப்படுத் துவது உள்ளிட்ட செயற்பா டுகளை முன்னெடுப்பதில் கடமைகளை சீராக மேற்கொள் வதில் பல்வேறு சிக்கல்கள் காரணமாக பணியாளர்களால் தங்களது கடமைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

எனவேதான் நாம் இந்த அதிகார இழுபறி நிலைமை களில் பணியாளர்களை மீட்டு சபையின் நாளாந்த கடமை களை சீராக மேற்கொள்ள உய ரதிகாரிகள் தலையிட்டு நிரந்தர தீர்வினை பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கை யினை முன்வைத்து வரும் திங்கள் முதல் பணிப் பகி ஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளோம் எனத் தெரிவித்துள்ளனர். (ம-03,100)

## வவுனியா நகைக் கடை ஒன்றில்

# ரூ. 4 இலட்சம் பெறுமதியான நகைகள் திருடிய குற்றச்சாட்டில்

## தாய், மகள் மற்றும் மகளின் காதலன் கைது

(வவுனியா)

வவுனியாவில் அமைந்து ள்ள பிரபல நகைக் கடை ஒன் றில் இருந்து நான்கு இலட்சம் பெறுமதியான நகைகளை சூட் சுமமான முறையில் திருடிய மூன்று பேரை வவுனியா குற் றத்தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர் .

இச்சம்பவம் தொடர்பில் தெரி யவருவதாவது, வவுனியாவில் அமைந்துள்ள பிரபல நகை கடையில் கடந்த 13 ஆம் திகதி நகை வாங்குவதற்காக தாய், மகள் மற்றும் மகளின் காதலன் ஆகியோர் சென்றுள்ளனர். இதன்போது கடை ஊழியரி னால் அவர்கள் கேட்கும் நகை கள் காட்டப்பட்டுள்ளது. இவ் வாறு பல நகைகளை பார்த்த குறித்த நபர்கள் கடை ஊழியர் சற்றே அசந்த நேரத்தில் குறிப் பிட்ட நகைகளை எடுத்துள்ளனர்.

பின்னர் தமக்கு பிடித்தமா திரி நகை இல்லை எனத் தெரி வித்துவிட்டு அங்கிருந்து சென் றுள்ளனர். அன்றையதினம்

மாலை நகைகளின் இருப்பு எடுக்கும் பொழுது குறிப்பிட்ட சில நகைகள் இல்லாமையி னால் வவுனியா பொலிஸில் நகைக் கடை உரிமையாள ரால் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

இதுதொடர்பில் விசாரணை செய்த பொலிஸார் அம்பாந் தோட்டை மற்றும் கலவ பகு தியை சேர்ந்த தாய், மகள் மற்றும் மகளின் காதலன் ஆகி யோரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களி டம் மேற்கொண்ட முதற் கட்ட விசாரணையின்போது நாட் டின் பல்வேறு பகுதிகளில் இவ் வாறான திருட்டுக்களை மேற் கொண்டிருந்ததுடன் திருடப் பட்ட நகைகளை அடகு வைத்து ள்ளமையும் கண்டுபிடிக்கப்பட் டுள்ளது. (ம-03,250,299)

## பாம்புக்கடிக்கிலக்காகி

# சிவாஜிலிங்கம் வைத்தியசாலையில்

(கரணவாய்)

முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலி ங்கத்துக்கு பாம்பு தீண்டியதால் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட் டுள்ளார்.

நேற்று இரவு வல்வெட்டித் துறையில் உள்ள அவருடைய அலுவலகத்தில் அவருக்கு பாம்பு தீண்டியுள்ளதாக தெரியவரு கிறது.

உடனடியாக வல்வெட்டித் துறை பிரதேச வைத்தியசா லைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சை க்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனும திக்கப்பட்டுள் ளார். (ம-03,60)

## பலத்த அச்சுறுத்தலுக்கு மத்தியில்

# முல்லை அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தில் துப்பரவுப் பணி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தில் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல் செயற்பாடுகளுக்கு மத்தியில் துப்பரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

குறிப்பாக அளம்பில் மாவீரர் துயிலுமில்ல வளாகத்தில் நேற் றைய நாள் முன்னாள் வடமா காணசபை உறுப்பினர் துரை ராசா ரவிகரன் மற்றும் மாவீரர்க ளின் உறவினர்கள் இணை ந்து துப்பரவுப் பணிகளில் ஈடுப ட்டிருந்தனர்.

அப்போது அங்கு வருகை தந்த பொலிஸார், அங்கு துப்ப ரவுப் பணியில் ஈடுபட்டிருந் தவர்களை அழைத்து குறித் தபகுதி இராணுவத்திற்கு உரிய தெனவும், துயிலுமில்ல வளா கத்திலிருந்து விலகிச் செல் லுமாறும் கூறியிருந்தனர்.

இதேவேளை அப்பகுதிக்கு வருகைதந்த புலனாய்வாளர் கள் மற்றும் இராணுவத்தினர் அங்கு துப்பரவுப் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்களை புகைப் படம், வீடியோ எடுத்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டிருந்தனர்.

இருப்பினும் குறித்த அச்சுறு த்தல் செயற்பாடுகளுக்கு மத்தி யிலும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் மாவீரர்களின் உறவி னர்கள் இணைந்து துப்பரவுப் பணிகளை முன்னெடுத்திரு ந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-03,281)

# மாவீரர் தின நிகழ்வுக்கு மட்டக்களப்பிலும் தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தமிழ் உணர் வாளர்கள் அமைப்பினால் மாவீ ரர் தினம் அனுஷ்டிப்பதற்கு ஏறாவூர் பொலிஸாரினால் நீதி மன்றத் தடையுத்தரவு பெறப்பட் டுள்ளது.

இந்த தடையுத்தரவு தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகனிடம் நேற்று வழங்கப் பட்டது.

தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் க.மோ கன் உட்பட அவர் சார்ந்தவர் கள், அமைப்பின் பிரதிநிதிகள் எவரும் மாவீரர் தினத்தை மட்டக்களப்பில் அனுஷ்டிக்க முடியாத வகையில் இவ்வுத் தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.(ம-3)

# புலிகளை நினைவுகூர்ந்தால் பொலிஸார் தடுப்பர்


## பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மேல் நீதிம ன்றத்தின் தீர்ப்பை "ஒரு வரலா ற்று முடிவு என்றும், புலிகளை நினைவுகூரும் எந்த நிகழ் வுகளையும் தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்கள் என வும் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நேற்றைய வழக்கு விசார ணைகளை பார்வையிடுவத ற்காக அஜித் ரோஹண யாழ். மேல் நீதிமன்றத்திற்கு வரு கை தந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-03)

# மாவீரர்களை நினைவுகூர்ந்து உரையாற்றிய சாணக்கியன்



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் பாராளுமன்றில் மாவீரர்களை நினைவுகூர்ந்து வரவு- செலவுத் திட்ட விவாத உரையை நிகழ்த்தியுள்ளார்.

"இது கார்த்திகை மாதம், அந்த அடிப்படையில் இந்த மண்ணுக்காக உயிரை தியாகம் செய்த அனைத்து மாவீரர்களையும் நான் முதலாவது நினைவு கூர வேண்டும்" என தெரிவித்தார். (ஜ-4)

# சட்டவிரோதமான முறையில் ரஷ்யாவிற்குள் நுழைய வேண்டாம்

## இலங்கைத் தூதரகம் அறிவிப்பு

**(கொழும்பு)**

**தொழில்வாய்ப்புகளைத் தேடுவதற்கும், ஐரோப்பிய நாடுகளில் குடியேறுவதற்குமாக மாணவர் விசாக்களில் ரஷ்யாவிற்குள் பயணிக்கும் இலங்கையர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது. இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு தண்டனைகளும் அபராதமும் விதிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் நிலையில், ரஷ்யாவையோ அல்லது வேறு எந்த அயல் நாடுகளையோ அடைவதற்கு இதுபோன்ற சட்டவிரோத வழிமுறைகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு ரஷ்யாவில் உள்ள இலங்கைத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.**

இது குறித்து ரஷ்யாவில் உள்ள இலங்கைத்தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

இலங்கையின் போலி வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு எதிராக இலங்கையர்களிடமிருந்து பல எண்ணிக்கையான முறைப்பாடுகள் தூதரகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

தொழில்வாய்ப்புகளைத் தேடுவதற்கும், ஐரோப்பிய நாடுகளில் குடியேறுவதற்குமாக மாணவர் விசாக்களில் ரஷ்யாவிற்குள் பயணிக்கும் இலங்கையர்களின் எண்ணிக்கை பல ஆண்டுகளாக வெகுவாக அதிகரித்து வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ரஷ்யாவில் உள்ள இலங்கைத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது. (ஜ-4)

# படகுகளை விடுவிக்குமாறு இந்திய மீனவர்கள் போராட்டம்



(டில்லி)

இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளையும் விடுவிக்க வலியுறுத்தி பாம்பன் கடலில் இறங்கி பாதிக்கப்பட்ட மீனவர்கள் தமது குழந்தைகளுடன் போராட்டமொன்றை நடத்தினர்.

கடந்த 2016 ஆம் ஆண்டு இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட பாம்பன், தங்கச்சிமடம், நம்புதாளை உள்ளிட்ட ராமநாதபுரம் மாவட்ட மீன்பிடி கிராமங்களைச் சேர்ந்த 19 படகுகளை விடுவிக்க வலியுறுத்தி, பாதிக்கப்பட்ட மீனவர்கள் குழந்தைகளுடன் நேற்று வெள்ளிக்கிழமை காலை பாம்பன் தெற்கு கடலில் இறங்கி போராட்டம் நடத்தினர்.

கடந்த நான்கு வருடங்களாக மத்திய மாநில அரசுகள் இலங்கை வசமுள்ள படகுகளை மீட்க எந்தவித நடவடிக்கையும் எடுக்காததைக் கண்டித்தும் படகுகளுக்கு நிவாரணமாக தலா 30 இலட்சம் ரூபாய் வழங்க வலியுறுத்தியும் குறித்த போராட்டத்தை நடத்தினர். (ஜ-4)

# கொரோனா வைரஸில் இருந்து பாதுகாப்பு பெற உதவும் கூகுள் வரைபடம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் அதிகமுள்ள இடங்களை கூகுள் வரைபடத்தில் **(Google Map)** சுட்டிக்காட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதனை அடிப்படையாகக் கொண்டு பயனாளிகள் குறித்த பிரதேசங்களில் பயணம் செய்வதனைத் தவிர்க்க முடியும் அல்லது அவதானமாக செயற்பட முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.




இவ்வசதியானது அன்ரோயிட் மற்றும் **iOS** சாதனங்களுக்கான கூகுள் வரைபட அப்பிளிகேஷன்களில் தரப்படவுள்ளன.

உலக நாடுகளில் கொரோனாத் தொற்றுப் பரவலடைந்து வரும் நிலையில், பல நாடுகள் கொரோனாத் தடுப்பூசியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

இதற்கமைய தொழில்நுட்ப நிறுவனங்களும் தொழில்நுட்ப உதவிகளை செய்வதில் முனைப்பாகவுள்ளன. இந்த வரிசையில் கூகுள் நிறுவனமும் தனது வரைபட வசதி மூலம் பயனர்களுக்கு உதவ முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# 359 பேர் கைது

(கொழும்பு)

சமூக இடைவெளியைப் பேணாமை மற்றும் முகக்கவசம் அணியாமை தொடர்பில் இதுவரையில் 359 பேர் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்தார். குறித்த குற்றச்சாட்டின் கீழ் நேற்று மாத்திரம் 47 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

# மீன்பிடி துறைசார்ந்த கடன்களுக்கு நிவாரணம் வழங்க அரசு திட்டம்



(கொழும்பு)

மீன்பிடித் துறையுடன் தொடர்புடையோர் பெற்றுக்கொண்ட கடன்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மத்திய வங்கியுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாக மீன்பிடித் துறைமுக, நீண்டநாள் மீன்பிடி நடவடிக்கை மற்றும் மீன் ஏற்றுமதித்துறை இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

துறைசார்ந்தோர் பெற்றுக் கொண்ட கடன்களை மீள செலுத்த குறைந்தது மூன்று மாத சலுகைக் காலத்தை வழங்குமாறு மத்திய வங்கியிடம் கோரப்பட்டுள்ளதாகக் கூறிய அவர்,

இறால், நண்டு உள்ளிட்ட கடல்வாழ் உயிரின கொள்வனவை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினூடாக முன்னெடுப்பதற்கான விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றினால் கடந்த 21 ஆம் திகதி பேலியகொட மீன் சந்தை மூடப்பட்டது.

இதனால் இதுவரை 750 இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான மீன் உற்பத்திகள், கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினூடாக கொள்வனவு செய்யப்பட்டன.

இவை பாதுகாப்பான முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக மீன்பிடித் துறைமுக, நீண்டநாள் மீன்பிடி நடவடிக்கை மற்றும் மீன் ஏற்றுமதித் துறை இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# துறைமுக சேவை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டதற்கு இதுவே காரணம்!




(கொழும்பு)

துறைமுக சேவை 24 மணித்தியாலமும் தடையின்றி முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலேயே துறைமுக சேவை அத்தியாவசிய சேவையாக ஜனாதிபதியால் பிரகடனப் படுத்தப்பட்டது என துறைமுக அபிவிருத்தி அமைச்சர் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக செயற்பாடுகளை நேற்று முன்தினம் பார்வையிட்ட பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் துறைமுக சேவைகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாட்டின் பிரதான பொருளாதார கேந்திர மையமாக துறைமுக சேவை காணப்படுகிறது.

துறைமுக சேவை அத்தியாவசிய சேவையாக ஜனாதிபதியால்பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 24 மணித்தியாலமும் துறைமுக சேவை தடையின்றி முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது இதன் எதிர்பார்ப்பாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# சஹ்ரான் மனைவியின் உயிருக்கு ஆபத்து
## பாதுகாப்பைப் பலப்படுத்தக் கோருகிறது
## மனித உரிமைகள் ஆணைக்குழு


**(கொழும்பு)**

**உயிர்த்த குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரியான சஹ்ரான் காஷிமின் மனைவி அப்துல் காதர் பாத்திமா ஹாதியாவின் பாதுகாப்பை பலப்படுத்துமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு கோரிக்கை விடுத்துள்ளது. சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உப்புல்தெனியவுக்கு கடிதம் மூலம் இக்கோரிக்கையை முன்வைத் துள்ளது.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் சாட்சியம் வழங்கிய பின்னர் அவரது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

பாத்திமா ஹாதியாவுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதால், அவர் வெலிகடை சிறையிலிருந்து வெலிகந்த வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதன் பின்னணியில் இத்தகைய முறைப்பாடுகள் பல கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்படும் நபர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய, சிறைச்சாலைகள் திணைக்களம் முழுமையாக முயற்சிக்கும் என நம்புவதாகவும் ஹாதியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உறுதியான பாதுகாப்பு கட்டமைப்பொன்றினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்துமாறும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன், ஹாதியா தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள வைத்தியசாலையில் அவரது பாதுகாப்புக்கு பொறுப்பாக செயற்படும் அதிகாரி உள்ளிட்டோரின் விபரங்களை தமக்குத் தருமாறும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஜ-4)

# இரட்டைப் பிரஜாவுரிமை இருப்போர் அரசியல் அதிகாரத்துக்கு வரக்கூடாது



(கொழும்பு)

இரட்டைப் பிரஜாவுரிமை இருப்பவர்களுக்கு நாட்டில் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரங்களை வழங்கக்கூடாது. நாடு இக்கட்டான நிலைமையைச் சந்திக்கும்போது அவர் மற்றைய நாட்டுக்கு சென்று விடுவார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

நாட்டை நேசிக்கின்ற, நாட்டின் சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும் என்ற நாட்டுப்பற்று உள்ளவர்களே பாராளுமன்றத்துக்குத் தேவை. இரட்டை பிரஜாவுரிமை உள்ளவர்களிடம் இதனை எதிர்பார்க்க முடியாது. யுத்தத்தின் போது ஒரு கட்டத்தில் நாங்கள் பின்வாங்கும் நிலை ஏற்பட்டபோது. இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றிருந்தவர்கள் எமது நாட்டைவிட்டு அவர்களின் மற்ற நாட்டுக்கு சென்றார்கள். அதனால் நாடு இக்கட்டான நிலைமைகளை சந்திக்கும்போது அவ்வாறான வர்கள் நாட்டைவிட்டு சென்றுவிடும் ஆபத்து இருக்கின்றது.

அதனால் இரட்டை பிரஜாவுரிமை இருப்பவர்கள் நாட்டில் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரங்களுக்கு நியமிக்கக்கூடாது.

அமெரிக்காவின் பிரஜாவுரிமையை பெற்றிருப்பவர்கள் அந்த நாட்டுக்கு அதிக வரி செலுத்துகின்றனர். ஏனெனில் அவர்கள் அந்த நாட்டின் சமூக ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். எமது நாட்டில் வாழ்கின்ற மக்களுக்கு உரித்தான அரசாங்கம் ஒன்றே எமக்குத் தேவை என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மீள்பரிசீலனை செய்யப்படும்

(கொழும்பு)

நாட்டில் தற்போது பின்பற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள் தொடர்பில் பரிசீலனை செய்யப்படுமென வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.



கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலில் இத்தாலி, ஜேர்மன், நெதர்லாந்து, பிரான்ஸ் மற்றும் ருமேனியா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் கலந்துகொண்டனர்.

நீண்ட கால இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் அவற்றின் மீதான தடைக்காலம் தொடர்பில் தெளிவுபடுத்துமாறு இதன்போது ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவினால் கோரப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று காரணமாக பரிமாற்ற நடவடிக்கைகள் மற்றும் சுற்றுலாத்துறையின் வருமான வீழ்ச்சியினால் நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார மற்றும் அந்நியச் செலாவணி சிக்கல்கள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சினால் இதன்போது தெளிவூட்டப்பட்டுள்ளது. (ஜ-4)

# கட்டுநாயக்க சுதந்திர வலயத்தில் ஊழியர்கள் பலர் உணவின்றி

(கொழும்பு)

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் பணியாற்றும் மானப்பவர் ஊழியர்கள் கடும் நெருக்கடியான நிலைமைக்கு முகம் கொடுத்துள்ளனர் எனவும் அவர்கள் நாளாந்த வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் ஊழியர்களுக்காக இயங்கும் அமைப் பின் இயக்குநர் பத்மினி வீரசூரிய தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையை கணக்கிட்டால் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் நிரந்தர தொழிலற்ற 30 ஆயிரம் பேர் பணியாற்றுகின்றனர்.

அவர்கள் 800 முதல் 1200 வரை சம்பளம் பெறுகின்றனர். எனினும் அவர்களுக்கு நிரந் தர ஊழியர்களுக்கு கிடைக்கும் எவ்வித சலுகைகளும் கிடைப் பதில்லை.

தொழில் வழங்குபவர்கள் அவர்கள் தொடர்பில் தேடிப்பார்ப்பதில்லை. அவர்களில் பெரும் பாலானோர் தங்கள் தொழில்களை இழந்துள்ளதுடன் இருப்பிடங்களையும் இழந்துள்ளனர்.

பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் கொரோனா பரவல் ஏற்பட்டவுடன் அவர்களை இருப்பிடங்களுக்கு வர வேண்டாம் என வீட்டு உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் சிலர் உணவு, குடி நீர் இன்றி இரண்டு வாரங்கள் அறைகளுக்குள் சிக்கியுள்ளனர்.

மிகவும் மோசமான நிலைமைக்குள் அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

குறைந்த பட்சம் அவர்களுக்கு உணவு வழங்குவதற்கு உதவுமாறு உரிய அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்வதாக பத்மினி வீரசூரிய தெரிவித்துள்ளார். (ஜ-4)

# நெருக்கடியான நிலையில் கொழும்பு மக்கள் தீர்வுகாண அரசாங்கம் தவறிவிட்டது
## சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கொழும்பு நகரத்தின் பல பகுதிகள் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளன என தெரிவித்துள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம், கொரோனா வைரஸ் தொடர்பான விடயங்களில் அரச அதிகாரிகளிடமிருந்து போதிய ளவு ஆதரவு கிடைப்பதில்லை எனவும் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் நடவடிக்கைகளில் குறைபாடுகள், பிரச்சினைகள் ஏற்படும்போது சுகாதார அமைச்சு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மீது பழியைப் போடுகின்றது என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் பாலசூரிய தெரிவித்துள்ளார்.

கொரோனா தொடர்பான விவகாரங்களில் எப்போதும் பழியை எங்கள் மீது போடுவது நியாயமில்லை எனத் தெரிவித்த அவர் கொழும்பு நகரத்தின் நிலையைப் பொறுத்தவரை பல பகுதிகள் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளன என்றும் இதன் காரணமாக பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு நகரின் கொரோனா வைரஸ் நிலவரம் தொடர்பாக நடவடிக்கைகளை எடுக்கமுயலும் போது சுகாதார அமைச் சுடன் தொடர்புபட்ட அலுவலகங்களைச் சேர்ந்த அதிகாரிகள் போதியளவு ஆதரவை வழங்காததை தாங்கள் அவதானித்துள்ளதாகவும் கொழும்பின் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கு அரசாங்கம் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்றும் அந்த மக்களிற்கு போதுமான அளவு உணவுப்பொருட்கள் கூட வழங்கப்படவில்லை எனவும் பாலசூரிய மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

## மீள் கேள்வி அறிவித்தல் - 2021

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2021.01.01- 2021.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

| விண்ணப்பப்படிவம் விநியோகிக்கப்படும் திகதி, நேரம் | கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி, நேரம் | கேள்வி திறக்கப்படும் திகதி, நேரம் |
|---|---|---|
| திகதி:- 2020.11.23 ஆம் திகதி முதல் 2020.12.01 ஆம் திகதி வரை, அலுவலக நாட்களில் மட்டும். | திகதி:- 2020.12.02 ஆம் திகதி புதன்கிழமை | திகதி:- 2020.12.02 ஆம் திகதி புதன்கிழமை |
| நேரம்:-மு.ப 09.00- பி.ப 3.00 வரை | நேரம்:-மு.ப 10.00 மணி | நேரம்:- மு.ப 10.00 மணி |
| இடம்:- கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலகம். | இடம்:- கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலகம். | இடம்:- கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலகம். |

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகள் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை எம்மால் வழங்கப்பட்ட கடித உறையில் தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என முகவரியிட்டு தபால் உறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிட்டு 2020.12.02 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவு தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் மேற்குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும்.

இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என முகவரியிட்டு குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவு தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விகள் யாவும் 2020.12.02 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு கரைச்சி பிரதேச சபையில் கேள்விச் சபை முன்னிலையில் திறக்கப்படும். கேள்விச் சபையின் முடிவே இறுதி முடிவாகும். கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விகாரர் பிரசன்னமாகி இருக்கலாம்.

| இல | குத்தகை நிலையம் | கேள்வி வைப்பு பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்வி படிவ கட்டணம் மீளளிக்க முடியாதது | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வி தொகை |
|---|---|---|---|---|
| | சேவைச்சந்தை - கிளிநொச்சி | | | |
| 1 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை மீன் | 50,000.00 | 1,000.00 | 2,238,390.00 |
| 2 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை மரக்கறி | 120,000.00 | 1,000.00 | 5,455,890.00 |
| 3 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை பழம், வெற்றிலை, பாக்கு | 25,000.00 | 1,000.00 | 1,158,301.00 |
| 4 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை கருவாடு, முட்டை | 10,000.00 | 1,000.00 | 484,785.00 |
| 5 | கிளிநொச்சி பொது மலசலகூடம் | 3,000.00 | 1,000.00 | 126,248.00 |
| | கிளிநகர்ப் பகுதி | | | |
| 6 | கிளிநொச்சி சிறுவர் பூங்கா அருகில் உள்ள ஐஸ்கிறீம் விற்பனை நிலையம் | 10,000.00 | 1,000.00 | 613,800.00 |
| 7 | கரடிப்போக்கு சந்தியில் இருந்து இரணைமடுச் சந்தி வரையான A9 வீதி வாகன தரிப்பிடம் | 6,000.00 | 1,000.00 | 251,396.00 |
| | பொதுச்சந்தை-பரந்தன் | | | |
| 1 | பரந்தன் ஆட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 68,371.00 |
| | பொதுச்சந்தை- வட்டக்கச்சி | | | |
| 1 | வட்டக்கச்சி சந்தை தொகுதி | 7,000.00 | 1,000.00 | 303,123.00 |
| 2 | வட்டக்கச்சி கோழி இறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 505,890.00 |
| 3 | இராமநாதபுரம் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 358,578.00 |
| 4 | இராமநாதபுரம் கோழி இறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 410,850.00 |
| 5 | இராமநாதபுரம் ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 40,894.00 |
| | பொதுச்சந்தை- இரணைமடு | | | |
| 1 | இரணைமடு சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 55,539.00 |
| 2 | இரணைமடு கோழி இறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 493,515.00 |
| | பொதுச்சந்தை- உருத்திரபுரம் | | | |
| 1 | D10 உருத்திரபுரம் சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 25,244.00 |
| 2 | D10 உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 200,970.00 |
| 3 | D10 உருத்திரபுரம் கோழியிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 75,596.00 |
| | பொதுச்சந்தை- ஸ்கந்தபுரம் | | | |
| 1 | ஸ்கந்தபுரம் சந்தை தொகுதி | 10,000.00 | 1,000.00 | 418,018.00 |
| | பொதுச்சந்தை- தருமபுரம் | | | |
| 1 | தருமபுரம் சந்தை தொகுதி | 2,000.00 | 1,000.00 | 89,584.00 |
| | பொதுச்சந்தை- கல்லாறு | | | |
| 1 | கல்லாறு மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 71,280.00 |
| | பொதுச்சந்தை- ஊற்றுப்புலம் | | | |
| 1 | ஊற்றுப்புலம் மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 175,216.00 |
| | பொதுச்சந்தை- கண்டாவளை | | | |
| 1 | கண்டாவளை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 50,543.00 |
| | பொதுச்சந்தை- முரசுமோட்டை | | | |
| 1 | முரசுமோட்டை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 79,398.00 |
| | பொதுச்சந்தை- அக்கராயன் | | | |
| 1 | அக்கராயன் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 89,968.00 |

### நிபந்தனைகள்

1. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் எதுவித அறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படும்.
2. கடந்த காலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்த தவறியவர்களும், கறுப்புபட்டியலில் உள்ளவர்களும் குத்தகைகேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்கள்.
3. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.
4. கேள்விகாரர் கரைச்சிப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசித்தல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ளவரும் போது தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணத்தின் நிழற்பிரதியை (தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதி பத்திரம்) கிராம சேவையாளர் மூலம் உண்மைப் பிரதி என சான்றுப்படுத்தி சமர்ப்பிப்பதுடன், கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்கவேண்டும்.
6. கேள்வி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது சபையால் வழங்கப்பட்ட கேள்விப்பத்திரம், கடித உறை என்பவற்றை மட்டுமே பயன்படுத்த முடியும்.
7. சித்தியடையும் கேள்விகாரர் கேள்வி தொகையின் மூன்றில் ஒரு பகுதி தொகையினை உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும். குறித்த கேள்விகாரர் ஒப்பந்தத்திற்கு அமைவாக குத்தகை நிலையத்தை நடாத்தினால் குறித்த வைப்பு தொகை புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களின் குத்தகை ஒப்பந்தமாக மாற்றம் செய்யப்படும்.
8. இறைச்சி கடைகள், சந்தைகள், குத்தகை நிலையங்கள் அனைத்தும் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்பட வேண்டும். குத்தகைகாரர் தவிர்ந்த வேறு ஒருவரால் குத்தகை நிலையம் நடாத்தப்படின் உடனடியாக ஒப்பந்தம் இரத்து செய்யப்படுவதுடன் வைப்புப்பண்மும் மீளளிக்கப்படமாட்டாது.
9. மாதாந்த குத்தகைக் கட்டணங்களை அதேமாதம் 30ம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். குறித்த கால எல்லைக்குள் செலுத்தத்தவறின் பத்து நாட்களுக்கு உட்பட்டுசெலுத்தும் பட்சத்தில் கட்டுப்பணத்துடன் **10%** தண்டப்பணத்தையும், கால தாமதம் பத்து நாட்களுக்கு மேற்படும் பட்சத்தில் கட்டுப்பணத்துடன் **15%** தண்டப் பணத்தையும் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
10. தொடர்ச்சியாக இரு மாதங்கள் குத்தகை கட்டணங்கள் செலுத்த தவறும் பட்சத்தில் எதுவித முன்னறிவித்தலுமின்றி குத்தகை நிலையம் சபையால் பொறுப்பேற்கப்படும்.
11. கொல்களத்தில் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியை, இறைச்சி கடையினை குத்தகைக்கு எடுத்தவர் தன்னால் குத்தகைக்கு பெற்றுக்கொண்ட குத்தகை நிலையத்துக்கு மட்டும் எடுத்துச்செல்ல முடியும். பிரதேச சபை எல்லைக்கு அப்பால் எக்காரணத்திற்காகவும் கொண்டு செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.
12. துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையத்திற்கான கட்டணமாக துவிச்சக்கர வண்டிக்கு ரூபா.5.00 உம், மோட்டார் சைக்கிளுக்கு ரூபா.10.00 உம், முச்சக்கர வண்டி, கயஸ் போன்ற சிறிய ரக வாகனங்களுக்கு ரூபா 20.00 உம், கனரக வாகனங்களுக்கு ரூபா 50.00 உம் மட்டுமே அறவிட முடியும்.
13. அனைத்து தராசுக்கொட்டகைக்குமான வரி அறவீட்டினை மேற்கொள்ளும் போது தற்போது பாவனையிலுள்ளவாறு **3%** வரியினையே அறவிட முடியும். வரி வீதங்களின் அதிகரிப்பையோ குறைப்பையோ சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.
14. கிளிநகர்ப்பகுதி வாகன தரிப்பிட கட்டண அறவீடு, ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் அனைத்தும் "2016.02.02ம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தகமானிப் பத்திரிகையின் (அதி விசேசமானது) பகுதி 2- பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வாகனங்களை நிறுத்துதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்" தொடர்பான 1 தொடக்கம் 36 வரையான நியமத்துணை விதிகளுக்கு கட்டுப்படும்.
15. ஆரம்ப கேள்வி தொகையை விட குறைவான கேள்வி கோருபவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
16. கேள்விகாரர் இலங்கை பிரஜையாகவும் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருப்பதை அறிமுகச் சான்றிதழ் மற்றும் வதிவிட சான்றிதழை சமர்ப்பிப்பதன் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.
17. கேள்விகோரும் போது கட்டுப்பணத்தை குறித்த கால எல்லைக்குள் (அதிகபட்சம் ஒருவார காலம்) செலுத்துவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.
18. சபையால் கட்டப்பட்ட கடைகள் காணப்படாதவிடத்து சபையால் கடை கட்டப்படும் வரை தற்காலிக கடை குத்தகைதாரராலேயே கட்டப்பட வேண்டும். இதற்கான செலவீனங்களை சபை பொறுப்பேற்காது என்பதுடன் சபையால் கடை கட்டி வழங்கப்படவில்லை என்ற காரணத்தை முன்வைத்து மாதாந்த கட்டணத்தில் விலக்களிப்போ, குறைப்பனவோ வழங்கப்படமாட்டாது.
19. இறைச்சிகடைக்குரிய மாதாந்த இட வாடகை கட்டணமாக ரூபா 1500.00 இனை ஒவ்வொரு மாதமும் சபைக்கு செலுத்த வேண்டும்.
20. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக பிரதேச சபை தவிசாளர்/செயலாளரினால் காலத்துக்கு காலம் விதிக்கப்படும் எழுத்து மூல நிபந்தனைகளையும் குத்தகைகாரர் கடைப்பிடிக்க வேண்டும்.
21. மாட்டிறைச்சி கடைகளை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வெளியிடப்படும் வர்த்தமானிகள், சுற்றுநிருபங்களுக்கு அமைய சபையினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.
22. இந்நிபந்தனைகள் தொடர்பாக சபையின் எந்தவித முடிவையும் ஏற்பதுடன் இது தொடர்பில் சபைக்கெதிராகவோ தவிசாளர்/செயலாளருக்கெதிராகவோ நீதிமன்ற நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள முடியாது.

(C-742)

**தவிசாளர், கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

# மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம்

(யாழ்ப்பாணம்)

பிரதமரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக நாடளாவிய ரீதியில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆல யங்கள் தோறும் உலக மக்கள் அனைவரதும் நலன் வேண்டி முன்னெடுக்கப்படும் மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம் நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் தெல்லிப்பழை பன்னாலை சிவபூத வராயர் ஆலயத்தில் நாளை 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை யாகம் இடம்பெறவுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒலிபரப்பாக இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (5-4-18)

# யாழ்.மத்திய கல்லூரி தரம் 6 இற்கான அனுமதி

(யாழ்ப்பாணம்)

மேற்படி எமது கல்லூரியில் தரம் 6 இற்கான அனுமதி விண்ணப்பப் படிவங்களை 23.11.2020 ஆம் திகதி முதல் பாடசாலை நேரத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

அத்தோடு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் புள்ளிகளை பெற்ற மாணவர்களுக்கு **JCC Edu Care Trust** மூலம் விசேட புலமைப்பரிசில் முன்னுரிமை அடிப்படையில் உள்வாங்கப்பட்டு மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் யாழ். மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (5)

# இணையவழி உரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழ் அறிதநுட்பியல் உலகாயம், இலங்கை இணையவழி உரையாடல்-33 இன்று சனிக் கிழமை இரவு 7.30 மணி முதல் 8.30 மணிவரை தமிழறிதம் செயலாளர் சி. சரவணபவானந்தனின் ஒருங்கிணைப்பில் இடம் பெறும்.

இவ் உரையாடல் சிறு வரிடையே இணையப் பயன்பாடு-நன்மைகளும் தீமைகளும் சமூக ஊடகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ற தலைப்பில் இடம்பெறும். இந்த இணையவழி உரையாடல் **Thamizharitham@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரியிலும் +94 766427729 என்ற வட்ஸ் அப் இலக்கத்திலும் **https://facebook.com/thamizha ritham** என்ற முகநூல் முகவரியிலும் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-7)

# தொடர்ந்தும் புறக்கணிக்கப்படும் சப்பச்சி மாவடி வீதி

(சாவகச்சேரி)

வீதி அபிவிருத்தியின் போது முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய தேவைப்பாடுள்ள சங்கத்தானை-சப்பச்சிமாவடி வீதி தொடர்ந்தும் புறக்கணிக் கப்பட்டு வருவதாக சாவகச்சேரி நகரசபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் யோ.ஜெயக்குமார் குற்றஞ் சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சீரற்ற வீதிகளில் ஆறாம் வட்டாரத்தில் உள்ள சப்பச்சிமாவடி வீதியும் ஒன்று. பாடசாலை மாணவர்கள் உட்பட ஏராளமானோர் பயன்படுத்தும் குறித்த வீதியை புனரமைத்துத் தருமாறு சபை ஆரம்பமான காலம் தொடக்கம் வலியுறுத்தி வருகிறேன்.

எனது தொடர் கோரிக்கையின் பயனாக 2021ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் சப்பச்சிமாவடி வீதியை புனரமைக்க 24 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பிற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் குறித்த வீதி புனரமைப்பிற்கு ஒதுக் கப்பட்ட நிதியில் இருந்து ஆறு இலட்சம் ரூபாவை வெட்டி வேறு வட்டார வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது. குறித்த வீதியை புனரமைக்க 24இலட்சம் ரூபாயே போதாது என்ற நிலையில் அந்நிதியை மேலும் குறைத்தமை சபை மீது மக்கள் அவப்பெயர் கொள்ள காரணமாக அமையும் என மேலும் அவர் தெரிவித்தார். (5-4-3௦)

# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்-2020

### யா/ துன்னாலை வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, கரவெட்டி

த.சுருதிகா-163, ரா.பிரஜன்-161.

### யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை

ஜே.யொனஸ்கான்-161, ஆர்.எறின்புளோறா -162.

### யா/வலி/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி

தி.சுதாங்கன் -173, சி.ரக்ஷனா-173,கு. மேரி கஜீனா-169,அஸ்வின்-167, ர.சியானா-167,சி.பிரதிக்ஷா-164.சு.யஸ்விந்த்-160.

### கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்

ப.யிதுர்சனா-183, அ.பிரிந்தா-174,கி.புருசோத்-174,சி.சபரிக்கரன் -170, ந.அபர்ஷிகா-169, லோ.அக்ஷயன்-168, யூ.அக்ஷயன்-165, சி.தர ண்யன்-165, சு.அபிசேக்-164,ஜெ.கவிசன்-162, ச.ஹபி சன்-161, ச.தர்விசன்-161, பா.டினோஜன்-161,இ.நிவேதிகா-160.

(316)

### யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்

வ.கபில்ராஜ் -170, ஜெ.செமீரா-169, கோ.ஹரிகரன்-163.

### யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை

ஐ.டனுஷியா-187, பி.பாலபானு-184, வி.நித்தியஸ்ரீ-183,எஸ்.தனுமியா-182,ஏ.ஆரதி-177, எஸ். ஷஸ்மியா-175,எஸ். சதுர்த்தியன்-171, எம்.கிரு சானிகா-171, வி.சபினயா-169, எம். ஜிதுர்சியன்-168, ஜெ. யனோசன்-167, ஜெ.லினோயா-166, கே.சஜீவன்-164, வி. தசானா-164, எஸ்.கபிசனா-163, கே.லொசிகா-163, எஸ். டிலக்ஷனா-163,ஆர். அக்ஷன்-162, எஸ்.சாம்பவி-160, ஐ.ஜெயந்-160.

### யா/மந்துவில் றோ.க.த.க பாடசாலை

த.திசாந்-174,செ.கம்சன்-173,ஜெ.சோபிகா-166

### யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்

து.அஸ்வின்-170, மு.பிரமோத்ஜன்-163,இ.அபிநயன்-169,த.ஹஜீதன் -168, இ.லோஜிதா-177, பி.அஸ்மிதா-173,கா.மேருகா-167.

### யாழ். இந்து ஆரம்ப பாடசாலை

ச.ஆர்வலன்-195, ப.பிரனித்-194, உ.அபினாஷ்-193, க.பிரவீனன்-192, க.பிரதீப்-192, ஜீ. ஜஸ்விந்தன்-191, ஜெ.வர்னுஜா-191, வை. கவின்- 188, சூ. சிவசாயினி-188, வ.திவ்யா-187, மு.நிதுஷன் -187, ம.பிரகவி-187, து.வர்ஷிகன்-187, வி.சதுஷிகா-186, அ.அஜய்-186, நி.நிஷாலன்-185, கே.மதுஷனா-185, கி.ஆர்விந்-185 வி.கஜானி-185, பூ. அபுசன்-185, தி.சுவேதா-184, ஜெ.அபிஷிகா-184, சு.அட்ஷயன்-184, இ.பவதர்ஷன்-184, சு.கலாத்மிகா-184, அ.அனுராகவன் -183, ச.ஆஷிக்-183, பி.சாகித்தியன்-183, த.அகீபன்-183, து.லக்ஷாயினி-183, சு.அதிரதன்-182, சு.டிஷானிகா-182, வி. ஆரபி-182, ப.அபிதரன்-182, செ.அர்ச்சயா-182, யோ.அக்ஷயா-181, சி.சிவகஜிசன்-181, பு.தோகன்யா-181, தி.அஞ்சனா-181, ம.தனுஸ்கரன்-181, சொ.பவிஸ்யா-180, சி.அபினுசன்-180, வி.திபுசன்-180, ம.பிரகதி-180, பி.ஜனுக்ஷன்-180,நி.திருவரேஸ்வர்-180.

இ.கானநிலவன்-179, வி.அஸ்னுகா-178, உ.பிரியங்கவி-178, ரா.இந்துஜா-178, சு.ஸஸாங்கி-178, சு. யுவர்ஷன்-178, ப.ஹரிஸ்னி-178, தே.அஸ்வின்ராம்-178, மு.பாத்திமா ஜெஸா-178, கி.விகாஷ்-177 , பி.நினோஜ்-177, ப.ஆரூரன்- 177, சு.தர ணிகா-176, ஐ.அக்சயன்-176, கி.ஜெய்சன்-176, வா.மாதங்கி-176, கா.ஸஸ் விகா-176, ரா.இலக்கியா-175, த.தர்சிகன்-175, விநிந்துஷன்-175,சிஹரிணி-175, இ.மதுஷிகா-175, லி. றோகித்-174, அ.அனந்திதா-174, கு.தனுஷ்ரன்-174, சு.காவியன்-174, இ. தேருஜா-174, ல.அக்ஷரா-174, சி.திபானா-174, ச.அர்ஜூன்-173, லோ.அதுர்ஷன்-173, வி.பவிஷனா-173, கே.திஷானன்-173, கு. கேதினி-172, ல.வேணுஜன்-171, சி.இலக்கியா-171, ஜெ.பபிஷாந்-171, நி.ஜதுஷனன்-171, ஜே.லக்ஷரா-171, ஐ.கிஷோன்-171, ஜெ.அபிசுதன்-171, பி.பிரகீஷன்-171, மு.சிருஷ்டிகா-171, வி.அக்ஷயா-171, நி.சங்கீத்-170, ரா.இராகவி- 170, நி.சகானா-170, ரு.கேமாங்கி-170, க.செந்துரன்-170,உ.மாதுமை-170, மு.சோப னா-170.

த.தாருக்ஷயன்-169, கு.கேநிஷா-169, ப.சாயீசன்-169, ர.சேய்விழி-169, சி.பவிஷான்-169, அ.அபர்ணிகா-169, சூ.கோபிகா-169, ச. மதுஷா-168, கு.ஆகீஷன்-168, ந.கபிக்ஷன்-168, மு.சைந்தவி-168, சு. மிதுர்சிகா-168, க.சானுஜன்-167, க.வர்ஷாகினி-167, கு.துவாகரன்-167, து.அஜீபன்-167, தே.அபிஷேக்-167, ஸ்ரீ.ஹரிஸ்மாகேதாரா- 166, ஜெ.லக்ஷிகா-166, நி. சமிக்ஷிகா-166, த.தபீஷன்-165, கே.நதிஷனா-165, இ.வசிகரன்-165, மு.கோபிநாத்-165, பி.கோகுல்நாத்-165, நா. தர்வீஷ்-165, இ.சஜீவ்-165, சி.மதுசன்-164, சு.யுவன்சங்கர்-164, சௌ. கௌதமி-164, ஞா.யாதவன்-164, ஐ.லுஷிதஜயன்-164, பி.நஸ்மிதன்- 163, ஜெ.ரிஷாங்கன்-163, வ.அபின்ஷா-163, ஜெ.அபிநயன் -163, ம.செந்துரன்-163, அ.பிறின்ஸ்சிரோன்-163, ஐ.அபினஜா-162, யோ.சுஜீவன்-161, ச. கர்ஸ்மினா-161, செ.அஸ்விகா-161, க.சதுர்ஷ்ரிகன்-161, ச.மாலவன்-161, கீ.அஸ்மிதா-160, ரூ.ஜயமிதா-160, சு.சுபர்ணா-160.

**தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைப்பெறுபேறுகள் பாடசாலை அதிபருடைய உறுதிப்படுத்தலுடன் அனுப்பி வைக்கப்படுமிடத்து பிரசுரிக்கப்படும்.**

# நகரசபை நிதிக் குழுவிலிருந்து விலகிய உறுப்பினர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் ம.நடனதேவன் நகரசபையின் உப குழுக்களில் ஒன்றான நிதிக் குழு உறுப்பினர் பதவி நிலையில் இருந்து விலகுவதாக நேற்று முன்தினம் 19 ஆம் திகதி வியாழக்கிழமை சபையின் தவிசாளர் மற்றும் செயலாளருக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளார். (5-4-30)

# இலங்கைக்கு கடத்தவிருந்த நோய் எதிர்ப்பு மருந்துகள்




(டில்லி)

தமிழ்நாடு இராமேஸ்வரத் தில் இருந்து தமிழக கடற்கரை வழியாக இலங்கைக்கு மருந் துகள் கடத்தியிருப்பதாக இந் தியக் கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை யடுத்து நேற்று முன்தினம் முதல் இராமேஸ்வரத்திலிரு ந்து பாம்பன் வரையிலான கடற்கரைப் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது தங்கச்சிமடம் வடக்கு கடற்கரை ஓரத்தில் உள்ள முட்புதர் ஒன்றில் சந்தேகத்திற்கிடமாக மூடை ஒன்று மறைத்து வைக்கப்பட் டிருந்தது. அதனையடுத்து சோதனை செய்தபோது அதில் இலங்கைக்குக் கடத்துவதற் காக நோய் எதிர்ப்பு மருந்துகள் இருப்பது தெரியவந்துள்ளது.

கடற்படையினர் மற்றும் பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகி ன்றனர். (ஜ-4)



இளம் தொழில்முனைவோருக்கு சந்தை வாய்ப்புகளை உருவாக்கும் கியூஷொப் திட்டத்தின் ஆரம்ப விழா, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபன வளாகத்தில் நடைபெற்றது.


**VIJAENTHIRAN MATHREMATICS CENTER**
(K.K.S வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்)

இணைந்த கணிதம்:- தெ.விஜேந் திரன் **(B.Sc.Dip.Ed)**

என்னிடம் தனி, குழு வகுப்புக் களில் கற்ற பொறியியல் பீடத்திற்கு தெரிவான **5 (mora), 14 (pera)** மாணவர்களுக்கு எதிர்காலத்தில் சிறந்த பொறியியலாளர்களாக மிளிர வாழ்த்துகின்றேன்.

**தொடர்புகளுக்கு:**
**0774413087**

(4694)


## பாதுகாப்பு படைமுகாம் 14 நாட்கள் மூடல்

**(வெல்லம்பிட்டிய)**

**வெல்லம்பிட்டிய -வென்னவத்த பகுதியில் அமைந்துள்ள சிவில் பாதுகாப்புப்படை முகாம் 14 நாட்க ளுக்கு மூடப்பட் டுள்ளது.**

**குறித்த சிவில் முகாமில் கொரோ னாத் தொற்று நோய் கண்டறியப் பட்டதையடுத்தே இவ்வாறு மூடப் பட்டுள்ளது. அத்தோடு படை முகா மில் உள்ளவர்களை தனிமைப் படுத் தலுக்குட்படுத்தியுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஜ-4)**


## படவரைஞர்களைப் பதிவு செய்தல் - 2021

யாழ்.மாநகரசபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள் மற்றும் புதுப்பித்துக்கொள்ள விரும்புவோர் எதிர்வரும் 31.12.2020 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞ்ர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குறிப்பு: மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறும் படவரைஞர்களது பதிவுகள் இரத்துச் செய்யப்படும்.

**முதல்வர்,**
**யாழ்.மாநகரசபை.**

(c-739)

## மாநகர எல்லைக்குள் குழாய்க்கிணறு நிர்மாணித்தல் - 2021

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் குழாய்க்கிணறு நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் இதுவரை பதிவு செய்யாத நிறுவனங்கள் மற்றும் 2019 ஆம் ஆண்டு பதிவினை மேற்கொண்ட நிறுவனங்கள் 2020 ஆம் ஆண்டுக்கான பதிவுகளை 31.12.2020 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன், யாழ்.மாநகர சபையில் பதிவினை மேற்கொள்ளாது குழாய்க்கிணறு நிர்மாணிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**முதல்வர்,**
**யாழ்.மாநகரசபை.**

(c-740)

## யா/கொக்குவில் இந்துக் கல்லூரி தரம் - 6 (2021)-அனுமதி

2021 இல் தரம் 6 அனுமதி பெறவுள்ள மாணவர்களுக்கான விண்ணப்பப் படிவங்களை பின்வரும் ஒழுங்கில் பாடசாலை அலுவலகத்தில் பி.ப 2.00 - பி.ப 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்

160 புள்ளிகளுக்கு மேல் - (செவ்வாய்க்கிழமை)
159-150 புள்ளிகள் - (புதன்கிழமை)
149-140 புள்ளிகள் - (வியாழக்கிழமை)
139-130 புள்ளிகள் - (வெள்ளிக்கிழமை)
விண்ணப்ப முடிவுத் திகதி - 07.12.2020 (திங்கட்கிழமை)
விண்ணப்பப் படிவம் பெறவருவோர் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வருகை தரவும்.

அதிபர்.

(c-741)


# 'கோப்' குழுவின் நடவடிக்கைகள் ஆரம்பம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று காரண மாகத் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட் டிருந்த கோப் எனப்படும் பொது நிறு வனங்கள் குழுவின் நடவடிக்கைகள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய கொரோனா சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களைப் பின்பற்றி கூட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர், நெடுஞ்சாலைகள் அமைச் சின் கணக்காளர், சம்பந்தப்பட்ட திட் டப் பிரிவின் திட்டப் பணிப்பாளர்கள் உள் ளிட்ட 7 அதிகாரிகள் மாத்திரம் நேற் றைய தினம் பாராளுமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் அறிவித் துள்ளது. (ஜ-4)

# சிறைக்கைதிகளுக்கு ஆயுர்வேத சிகிச்சை

**(கொழும்பு)**

**சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகும் சிறைக்கைதிகளுக்கு உள்நாட்டு மருந்து களை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.**



சிறைக் கைதிகளுக்கு கொரோனா தொற்று விரைவில் பரவுவதைக் கருத்திற் கொண்டு, கைதிகள் மற்றும் சிறை ஊழியர்களுக்கு சுதேச மருத்துவ முறை களை அறிமுகப்படுத்தத் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறைச்சாலையில் முதலாவது கொரோனாத் தொற்றாளர் ஒக்டோபர் 3ஆம் திகதி அடையாளம் காணப்பட்ட போதிலும் ஒரு மாதம் சென்றுதான் சிறைச்சாலைக்குள் கொரோனா தொற் றுப் பரவியது என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

தற்போது சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் தேசிய வைத்திய அதிகாரிகளும் இணைந்து சிறைக்கைதிகள் மற்றும் சிறைச்சாலை ஊழியர்களுக்கு சிகிச்சை வழங்க ஆயுர்வேத சிகிச்சை முறையை முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# மீண்டும் தொடங்கியது கால்வாய் சீரமைக்கும் பணி

(நெளுக்குளம்)

வவுனியா நகரசபை உறுப்பினர் ரி.கே.இராஜலிங்கத்தின் வட்டார நிதி ஒதுக்கீட்டில் முதலாம் குறுக்குத்தெரு கால்வாய் அமைக்கும் பணிகள் மழைக்கும் மத்தியில் மீண்டும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது .

நகரசபையின் வருடாந்த நிதி ஒதுக்கீட்டில் வட்டார உறுப்பினர் ரி.கே.இராஜலிங்கத்தின் ஆறு இலட்சம் ரூபாய் நிதியில் 44 மீற்றர் நீளமான கால்வாய் அமைக்கப்பட்டு வருகின்றது.

இம்மாதம் ஆரம்பிக்கப்பட்ட பணிகள் மழைக்கும் மத்தியில் தற்போது மீண்டும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வேலைத்திட்டங்களை கண்காணிப்பதற்காக நேற்று அப்பகுதிக்கு சென்று கால்வாய் அமைக்கும் பணிகளை நகரசபை உறுப்பினர் பார்வையிட்டுள்ளதுடன் நகரசபை தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் இடம்பெற்று வரும் வேலைத் திட்டங்கள் குறித்தும் கேட்டறிந்து கொண்டதாக நகரசபை உறுப்பினர் மேலும் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக குறித்த கால்வாய் அமைக்கப்படுவதற்கான ஆயத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்துள்ள நிலையில் கால்வாய் அமைக்கும் பணிகளில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதையும் இதனால் பல்வேறு அசௌகரியங்களும் வர்த்தகர் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டதை யடுத்து மழைக்கும் மத்தியிலும் தற்போது மீண்டும் வேலைத் திட்டங்கள் முன்னெடுத்து செல்லப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக கடந்த 12 ஆம் திகதி வலம்புரி பத்திரிகை சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (5-4-299)



# 5 ஆயிரம் மரநடுகை திட்டம் ஆரம்பம்






(கண்டாவளை )

பளை பிரதேசத்தின் ஏ9 நெடுஞ்சாலையின் இரு மருங்குகளிலும் மேற்கொள்ளப்படவிருக்கும் மரநடுகைச் செயல் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு பளை வைத்தியசாலை முன்பாக ஏ9 வீதி அருகே கடந்த செவ்வாய்க்கிழமை பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் தவிசாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

சபையின் எல்லைக்குள் 5 ஆயிரம் மரங்களை நான்கு வருடங்களில் நாட்ட திட்டமிட்டிருப்பதாகவும் அதில் ஆயிரம் மரங்கள் நாட்டப்பட்டுள்ளதாகவும் இந்த நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெறும் எனவும் தெரிவித்தார். இந்நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உப தவிசாளர், செயலாளர் மற்றும் சபை உறுப்பினர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (5-4-315)

# கறுப்பு நிறமாக மாறிய கிணற்று நீர்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வேணாவில் கிராமத்தில் நேற்று திடீரென ஒரு கிணற்றின் நீர் கறுப்பு நிறமாக மாறிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கிணற்று நீர் கறுப்பு நிறமாக மாறிய சம்பவத்தை மக்கள் பலர் சென்று பார்வையிட்டு வருவதோடு இந்தச் சம்பவம் எவ்வாறு நிகழ்ந்தது என்பது தொடர்பான மேலதிக விடயங்கள் எதுவும் இதுவரை தெரியவரவில்லை. (5-4-281)


# டெங்கு,கொரோனா விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

(நெளுக்குளம்)

வவுனியா காத்தார்சின்னக்குளம் கிராமிய சுகநல மேம்பாட்டுக்குழுவின் ஒழுங்கமைப்பின் கீழ் கிராம ரீதியான கொரோனா விழிப்புண்ர்வு மற்றும் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிகழ்ச்சி திட்டத்தின் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் 18 ஆம் திகதி முதல் விழிப்புணர்வு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதற்கமைய நேற்று ஶ்ரீராமபுரம் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட இல்லத்தரிசிப்பு நிகழ்வில் கிராம உத்தியோகத்தர், பொதுச்சுகாதார பரிசோதகர், டெங்கு தடுப்பு கள உத்தியோகத்தர்கள், பட்டதாரி பயிலுநர்கள், ஶ்ரீராமபுரம் கிராம அபிவிருத்திச்சங்கத்தினர் எனப் பலரும் இணைந்து கொண்டனர்.



இச் செயற்பாட்டில் குடம்பிகள் காணப்படும் இடங்கள், நுளம்பு பெருகும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு, உரிய மாதிரிகள் பெறப்பட்டதுடன், காணி உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டு நுளம்புத்தடைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் சிட்டையும் வழங்கப்பட்டது.

அத்துடன்பற்றையாக உள்ள அனைத்துக் காணிகளும் துப்புரவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது. மேலும் மக்கள் ஒன்று கூடும் இடங்களில் கொரோனா விழிப்புணர்வு அறிவித்தல்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் பிரதேச சபையினரின் ஒத்துழைப்புடன் திண்மக் கழிவகற்றும் நடவடிக்கையும் இக்கிராமத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (5-4-299)

# வெங்காய வெடி வெடித்து விவசாயி படுகாயம்

(தருமபுரம்)

பன்றிக்காக தயாரித்த வெங்காய வெடி தவறுதலாக வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அழகாபுரி பகுதி விவசாயி ஒருவர் பன்றிகளின் தொல்லை தாங்க முடியாமல் பன்றிகளை விரட்ட வெங்காய வெடி தயாரித்துள்ளார்.

அவ்வாறு தயாரித்த போது அவ்வெங்காய வெடி வெடித்து அவர் படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான விசாரணைகளைதருமபுரம்பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர்.(5-4-316)

# உலக மீனவர் தினம்

(குப்பிழான்)

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் உலக மீனவர் தின நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் யாழ்.பாடி விருந்தினர் விடுதியில் இடம்பெறவுள்ளது. குறித்த நிகழ்வில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து இணைய வழி மூலம் நிகழ்வுகள் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (5-4-18)

# இராசிபலன்

**21.11.2020**
**கார்த்திகை 06, சனிக்கிழமை,**
**சப்தமி பின்னிரவு 2.49 மணிவரை**
**திருவோணம் பிற்பகல் 3.16 மணிவரை**
**சுபநேரம் 3.10-4.40 மணிரை**
**இராகுகாலம் 9.10-10.40 மணிவரை**
**சந்திராஷ்டமம் -திருவாதிரை, புனர்பூசம்**

**வளவன்**


மேஷம்

புதிய முயற்சிகளில் வெற்றிபெறுவீர்கள், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படு வீர்கள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


ரிஷபம்

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய திட்டங்களில் ஆர்வம் கூடும், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.


மிதுனம்

உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, சேமிப்பு செலவாகா திருக்க விழிப்புணர்வு தேவை, மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.


கடகம்

நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் சந் திப்பு இடம்பெறலாம், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


சிம்மம்

மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், தன் னம்பிக்கையோடு பணிபுரிவீர்கள், சிக்க னத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம்.


கன்னி

மனநிறைவு கூடும் நாள், நீண்ட நாட்களாக தள்ளிப்போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


துலாம்

செல்லும் இடங்களில் சிந்தனை ஆற் றலால் சிறப்படைவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.


விருச்சிகம்

விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பொது வாழ்வில் புகழ்கூடும், வளர்ச்சி கூடும் நாள், சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள்.


தனுசு

நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும்.


மகரம்

ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய விடயம் முடிவில் ஆதாயத்தைக் கொடு க்கலாம், சிந்தனை மிகுதியான நாள், ஆற் றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.


கும்பம்

சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், பிரபலமா னவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


மீனம்

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறை வேறலாம், விலை உயர்ந்த பொருட் களை வாங்கும் வாய்ப்புண்டு, குடும் பத்தில் குதூகலம் தரும் சம்பவ மொன்று இடம் பெறலாம்.

**உன்னைவிடக் குறைத்து யாரையும் எடைபோட்டு விடாதே.**


# JOB வேலை வாய்ப்பு

**கமத்தொழில் அமைச்சு**
**உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு**

## தேசிய உணவு மேம்பாட்டு சபை

**(இலங்கை தேசிய பட்டினி இல்லாதொழிப்பு செயற்பாட்டு மையம்)**

## பதவி வெற்றிடங்கள்

தேசிய உணவு மேம்பாட்டு சபையில் (இலங்கை தேசிய பட்டினி இல்லாதொழிப்பு செயற்பாட்டு மையம்) செயற்திட்ட அதிகாரி பதவிக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### செயற்திட்ட அதிகாரி – வெற்றிடம் 01

இந்த திணைக்களத்தில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் துறை மட்டங்களில் மற்றும் கிராமிய மட்டங்களில் கடமைகளை மேற்கொள்ள வேண்டும்.

**கல்வித்தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UCG) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்ட கமத்தொழில் அறிவியல் தொடர்பான அடிப்படை பட்டம்

வயதெல்லை: 22 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு அதிகமாகாமல் இல்லாதிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை கிடையாது.

சம்பள அளவு : MA 3 - ரூபா. 32,200 - 10x445 - 11x660 - 10x730 – 5x750 - ரூபா. 54,960 இந்த சம்பளத்திற்கு வாழ்க்கை செலவு கொடுப்பனவான ரூபா. 7,800/- சேர்த்துக்கொள்ளப்படும்.

வேறு பிரதிலாபங்கள் - இந்த வெற்றிடம் ஓய்வூதிய சலுகைகள் அற்றது, மேலும் ஊழியர்களின் சேமநல நிதி பங்களிப்பு ஊழியர்களால் 8% க்கு எதிராக 12% மற்றும் ஊழியர்களின் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு 3% கூடுதல் பங்களிப்பு நிறுவனத்தால் வழங்கப்படும்.

மேல் குறிப்பிடப்பட்ட தகைமைகளை கொண்ட விண்ணப்பதாரர்கள் தமது சுயவிபரக்கோவையை கோரிக்கை கடிதத்துடன் கல்விச்சான்றிதழ் பிரதிகள்,மற்றைய சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதியுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலின் மூலம் 2020/12/14 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கப்பெறுமாறு அனுப்பி வைக்கவும். விண்ணப்பிக்கும் வெற்றிடத்தை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

அரசாங்கத்துறைகள் / அரச கூட்டுத்தாபனங்கள் / சட்டரீதியான சபைகள் மற்றும் அதிகார சபைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பின் அந்தந்த நிறுவனத்தின் தலைவர்கள் மூலம் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். மேற்கூறப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**தேசிய உணவு மேம்பாட்டு சபை**
**இல. 45, கிரிமண்டல மாவத்தை, நாரஹேன்பிட்டிய, கொழும்பு - 05.**
**தொடர்புகளுக்கு : 0112580194, 0112506895 E-mail - ffhc.srilanka@gmail.com**


# வறுமை ஒழிப்புக்கு ஆரம்பப் புள்ளியான 2021 பட்ஜெட்

## மைத்திரி பாராட்டு



(கொழும்பு)

2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாட்டின் வறுமை ஒழிப்புக்கு ஆரம்பப் புள்ளியாகும். இந்த வரவு- செலவுத் திட்டத்தை முழுமையாக வரவேற்பதாக ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான 02 ஆம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இம்முறை சிறந்ததொரு வரவு- செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவே நான் கருதுகின்றேன்.

தேசிய உற்பத்தியை ஊக்குவிக்கும் மற்றும் வறுமை நிலையை ஒழிக்கும் வகையிலான வரவு- செலவுத் திட்டமாகவே இது அமைந்துள்ளது.

வரலாற்றுக் காலத்தை எடுத்துக் கொண்டால் சிறிமாவோ பண்டாரநாயக்க காலத்தில் முன்வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் தேசிய உற்பத்தியை ஊக்குவிக்கும் திட்டங்கள் இருந்தன.

ஆனால் அதற்கு பின்னரான அரசாங்கம் அதனை இல்லாமல் செய்து திறந்த பொருளாதார நிலைமையைக் கொண்டு வந்திருந்தது. இதனால் பொருளாதார நிலைமையில் நெருக்கடி நிலைமையில் நாடு இருக்க காரணமாகியுள்ளது.

எவ்வாறாயினும் இந்த வரவு - செலவுத் திட்டத்தை வறுமையை முடிந்தளவுக்கு இல்லாமல் செய்வதற்கான திட்டமாகவே பார்க்கிறேன்.

நீண்ட கால பொருளாதாரக்கொள்கைகளில் காணப்பட்ட குறைபாடுகளினாலேயே நாடு இன்றைய வறுமை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு சில நாடுகள் ஆதரவு-இந்தியா குற்றச்சாட்டு

(டில்லி)

**கொரோனா நோய் தொற்றுக் காலத்திலும் சில நாடுகள் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை தொடர்ந்து ஆதரித்து வருவதாக ஐ.நாவுக்கான இந்திய தூதர் டி.எஸ். திருமூர்த்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.**

ஐ.நா.சபையின் 75வது அமர்வின் ஒருபகுதியாக உலக யூத காங்கிரஸ் அமைப்பின் சார்பில் 'யூத விரோதப்போக்கை எதிர்ப்பதில் ஐ.நா.வின் பங்கு' என்ற தலைப்பில் இணையவழியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யூத விரோதப்போக்கு உட்பட மத அடிப்படையிலான அனைத்துவகை பாகுபாடுகள் உலகில் எங்கு நடந்தாலும் அதை இந்தியா கண்டிக்கிறது.

இப்போதும் சில நாடுகள் கொரோனா நோய்த் தொற்றைப் பயன்படுத்தி உலக நாடுகளை மதத்தின் அடிப்படையில் பிளவுபடுத்தும் வேலையைச் செய்து வருகின்றன. அப்பாவி மக்களைக் கொல்வதிலிருந்தும் மத வெறுப்பைப் பரப்புவதிலிருந்தும், எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஆதரிப்பதிலிருந்தும் அவர்களை கொரோனா நோய்த் தொற்று தடுக்கவில்லை.

யூத விரோதத்தையும் வெறுப்பையும் பரப்புவதை மட்டுமன்றி மதத்தின் அடிப்படையில் உலகைப் பிளவுபடுத்துவதையும் அந்நாடுகள் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

தங்களது சமூகங்களுக்குள் நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கும், குறுங்குழுவாத வன்முறைகளைத் தடுப்பதற்கும், சிறுபான்மையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் அவர்கள் தங்களைத் தாங்களே சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

பயங்கரவாதத்தை எவ்வகையிலும் நியாயப்படுத்தக் கூடாது என்பதை ஐ.நா. சபை தீர்க்கமாகப் பேசுவது முக்கியம் என நாங்கள் நம்புகிறோம். இந்தியா உலகின் அனைத்து முக்கிய மதங்களுக்கும் சொந்தமான நாடு.

இந்திய நாகரிகம் என அழைக்கப்படும் இந்த நதியில் ஒவ்வொரு மதமும் ஜனநாயக அமைப்பு, பன்மைத்துவம், நல்லிணக்கம் ஆகியவற்றின் கட்டமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன" எனத் தெரிவித்துள்ளார். (நி-4)

# சீனாவின் செயற்பாடுகள் மீது உலக நாடுகள் கடும் அதிருப்தி

(பீஜிங்)

சீனாவின் செயற்பாடுகள் சட்டபூர்வ கடமைகளின் தெளிவான மீறல் என உலகநாடுகள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

சட்டசபை உறுப்பினர்கள் மற்றும் வெளியுறவு அமைச்சர்களை பணி நீக்கியதன் பின்னணியில் பிரித்தானியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, நியூஸிலாந்து ஆகிய உலக நாடுகள் சீனாவுக்கு எதிராக அணிதிரண்டுள்ளன.

அத்துடன் இவர்களை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டும் என கோரி உலகநாடுகள் சீனாவுக்கு கடும் அழுத்தம் கொடுத்து வருகின்றன.

தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதற்கான ஹொங்கொங் மக்களின் உரிமைகளை பல வீனப்படுத்துவதன் மூலம் விமர்சன குரல்களை சீனா ஒடுக்குவதாக உலகநாடுகள் புகார் தெரிவித்துள்ளன.

ஹொங்கொங்கின் ஸ்திரத்தன்மை, வளம் ஆகியவற்றை காக்க மக்கள் தங்கள் நியாயமான கவலைகளை வெளிப்படுத்த உரிமை வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

எனவே சீனா, பதவி நீக்கம் செய்யப்பட்ட ஹொங்கொங் சட்டசபை உறுப்பினர்களை மீண்டும் தங்கள் கடமைகளை செய்யும் வகையில் மீண்டும் பதவி அமர்த்த வேண்டும் என்று அழுத்தம் கொடுத்துள்ளது. (நி-4)

# 30 ஆண்டுகளின் பின் ஜோர்ஜியா மாநிலம் ஜனநாயகக்கட்சி வசம்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் ஜோ பிடன் வெற்றி பெற்று ஜனாதிபதி பதவிக்கு தகுதி பெற்றுள்ள நிலையில், தற்போதைய ஜனாதிபதி ட்ரம்ப் தேர்தலில் மோசடி நடைபெற்றதாக தொடர்ந்து குற்றம் சாட்டினார். குறிப்பாக ஜோர்ஜியா, அரிசோனா, பென்சில்வேனியா ஆகிய மாநிலங்களில் வாக்கு எண்ணிக்கையில் முறைகேடு நடந்ததாகவும், அங்கு மறுவாக்கு எண்ணிக்கை நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

எனினும், ஜோர்ஜியா மாநிலத்தில், ட்ரம்புக்கும், பிடனுக்கும் இடையிலான வாக்கு வித்தியாசம் குறைந்தளவில் இருந்தால் மறு வாக்கு எண்ணிக்கைக்கு மாநில அரசு உத்தர விட்டது. அதன்படி வாக்குகள் மீண்டும் எண்ணப்பட்டன. இந்த முறை வாக்குகள் அனைத்தும் கைகளால் எண்ணப்பட்டன. வாக்கு எண்ணிக்கை முடிவில் பிடன் வெற்றி உறுதி செய்யப்பட்டுவிட்டதாக உள்ளூர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக மாநில செயலாளரின் இணையத்தளத்தில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. வெற்றியாளரை இயந்திர வாக்கு எண்ணிக்கை துல்லியமாக தெரிவித்ததை, மறு வாக்கு எண்ணிக்கை உறுதிப்படுத்தியிருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், 30 ஆண்டுகளுக்குப் பிறகு ஜோர்ஜியா மாநிலம் ஜனநாயக கட்சியின் வசம் சென்றுள்ளது. 30 ஆண்டுகளில் முதல்முறையாக வெற்றி பெற்ற ஜனநாயக வேட்பாளர் என்ற பெருமையை ஜோ பிடன் பெற்றுள்ளார். (நி-4)

# வெனிசுவெலாவுக்கான தூதரை நியமித்தது அமெரிக்கா

## 10 ஆண்டுகளில் முதன்முறையாக இந்நியமனம்

(வோஷிங்டன்)

10 ஆண்டுகளில் முதல் முறையாக வெனிசுவெலா நாட்டுக்கு ஜேம்ஸ் ஸ்டோரி என்பவரை தூதராக அமெரிக்கா நியமனம் செய்துள்ளது.

அமெரிக்காவுக்கும், வெனிசுவெலா நாட்டுக்கும் இடையே கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மோதல் போக்கு நிலவி வருகிறது.

வெனி சுவெலாவில் மறைந்த ஹியூகோ சாவேஸ் ஜனாதிபதியாக இருந்தபோதே இம் மோதல் ஆரம்பமாகியது.

வெனிசுவெலாவின் தற்போதைய ஜனாதிபதியாக நிகோலஸ் மதுரோவை போதைப் பொருள் பயங்கரவாதி என்று ட்ரம்ப் நிர்வாகம் குற்றம் சாட்டி வந்தது.

இரு நாடுகள் இடையே தூதரக உறவு இல்லாமல் இருந்து வந்தது. இந்த நிலையில் 10 ஆண்டுகளில் முதல் முறையாக வெனிசுவெலா நாட்டுக்கு ஜேம்ஸ் ஸ்டோரி என்பவரை தூதராக அமெரிக்கா நியமனம் செய்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க பாராளுமன்ற செனட் சபையில் அண்மையில் நடைபெற்ற குரல் வாக்கெடுப்பில் ஜேம்ஸ் ஸ்டோரி நியமனத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அமெரிக்காவில் ஜோ பிடன் புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்க இருப்பது, அமெரிக்கா, வெனிசுவெலா இடையேயான உறவில் ஒரு புதிய அத்தியாயத்தை ஏற் படுத்தக்கூடும் என சர்வதேச பார்வையாளர்கள் எதிர்பார்க்கின்றனர். (நி-4)




**கொரோனா என்ற பெயர் கடந்த ஒரு வருடமாகத் தான் உலகம் முழுவதும் அறிமுகமானது என்ற நிலையில் ஏழு ஆண்டுகளுக்கு முன்பே கேரளாவில் உள்ள ஜோர்ஜ் எனும் இளைஞர் ஒருவர் தனது கடைக்கு கொரோனா என்று பெயர் வைத்துள்ள ஆச்சரிய தகவல் வெளிவந்துள்ளது.**

**கொரோனா என்ற சொல்லுக்கு லத்தீன் மொழியில் கிரீடம் என்று பொருள் என்றும், அதனால் கிரீடம் போல் தனது கடையின் பெயர் இருக்க வேண்டும் என்பதற்காக அந்த பெயரை வைத்ததாக உரிமையாளர் ஜோர்ஜ் கூறியுள்ளார்.**

# ஒப்புதல் பெற்ற சில மணி நேரத்தில் தடுப்பூசி மருந்துகள் அனுப்பி வைக்கப்படும்

(வோஷிங்டன்)

அமெரிக்க தடுப்பு மருந்து அமைப்பிடம் ஒப்புதல் பெற்ற சில மணி நேரத்தில் தடுப்பூசி மருந்துகள் அனுப்பி வைக்கப்படும் என பைசர் நிறுவனம் அறிவித்துள்ளது.

ஜேர்மனியின் பயான்டெக் நிறுவனமும் அமெரிக்காவின் பைசர் நிறுவனமும் இணைந்து கண்டுபிடித்த தடுப்பு மருந்து, இறுதிக்கட்ட பகுப்பாய்வு தரவுகளின்படி 95 சதவீதம் திறன் வாய்ந்தது.

எங்கள் தடுப்பு மருந்து அனைத்து தரப்பினருக்குமானது. வயதானவர்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் தடுப்பதாகவும், தீவிர பக்கவிளைவுகள் எதையும் ஏற்படுத்தவில்லை.




இன்னும் சில நாட்களில் அமெரிக்க தடுப்பு மருந்து அமைப்பிடம் ஒப்புதல் பெற திட்டமிட்டுள்ளதாக மருந்து நிறுவனம் தரப்பில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இந்தியா, ஆபிரிக்கா, லத் தீன் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் காலநிலை அளவு அதிகமாகவே உள்ளது. எனவே, வெப்ப மண்டலங்களில் இந்த தடுப்பு மருந்துகளை எடுத்துச் செல்வது மிகக் கடினம். இது தற்போது பைசர் நிறுவனத்துக்கு மிகப்பெரிய சவாலாக உள்ளது.

இந்நிலையில், பைசர் தடுப்பூசி மருந்து நிறுவன அதிகாரி ஆல்பர்ட் பவுர்லா தெரிவிக்கையில், அமெரிக்க தடுப்பு மருந்து அமைப்பிடம் ஒப்புதல் பெற்ற சில மணி நேரத்தில் தடுப்பூசி மருந்துகள் அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்துள்ளார். (நி-4)

# சைவப்பெருவள்ளலார் சேர்.பொன்.இராமநாதனின் குருபூஜை தினம் இன்று



இலங்கையின் ஆன்மீகப் புலமைப் பாரம்பரியத்தை உலக அரங்குக்கு இட்டுச் சென்றவர்களுள் சேர்.பொன். இராமநாதனுக்குத் தனியிடமுண்டு. அத்துடன், இலங்கை மணித் திருநாட்டில் சைவத் தமிழ்ச் சமூகத்தின் அடையாளம், பண்பாடு, அரசியல், கல்வியியல், காலனித்துவ விடுதலை உள்ளிட்ட பல்வேறு பணிகளை திரிகரண சுத்தியோடு முன்னெடுத்து அருந் தொண்டாற்றிய பெருந்தலைவராகவும் திகழ்ந்தவர் அவர்.

அந்நியராட்சியின் கீழ் பாமரராய், விலங்குகளாய், கண்ணிருந்தும் குருடர்களாய், காதிருந்தும் செவிடர்களாய், வாயிருந்தும் ஊமையராய் நாலமது தமிழரென வாழ்ந்திருந்த சூழலில் எம்மை மீட்டெடுக்க வந்த பெரியார்களில் ஆறுமுகநாவலர் முதன்மையானவர். நூற்பதிப்பு, உரை, துண்டுப் பிரசுரம், பாடசாலை நிறுவுதல், பாடநூலாக்கம், நூலாக்கம், பிரசங்கம், சமூகப் பணி என பல்தளங்களில் இயங்கி சுதேசத் தமிழ், சைவப்பண்பாட்டை மீட்டெடுத்த நாவலர் தனக்குப்பின் சைவத்தமிழ்ச் சமூகத்துக்கு தலைமை தாங்கத் தேர்ந்தெடுத்த மாமனிதரே சேர்.பொன்.இராமநாதன்.

நாவலரின் தீர்க்கதரிசனம் பொய்க்கவில்லை. பொன்னம்பல முதலியாருக்கும், செல்லாச்சி அம்மைக்கும் பிறந்த இரண்டாவது மகனே இராமநாதன் ஆவார். கொழும்பு றோயல் கல்லூரி, சென்னை பிரெசிடென்சி கல்லூரிகளில் கற்று வழக்கறிஞராகத் திகழ்ந்தவர்.

காலனித்துவ அரசில் பல்வேறு பதவிகளை வகித்தவர். தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம் எனப் பன்மொழிப் புலமையுள்ளவராகவும் இன ஐக்கியத்துக்காகப் பாடுபட்டு உழைத்தவராகவும் சேர்.பொன். இராமநாதன் அடையாளப் படுத்தப்படுகிறார். பௌத்த பிரம்மஞான சபையில் பொருளாளராகப் பதவி வகித்ததும் அதையொத்த சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் ஸ்தாபகத் தலைவராகத் திகழ்ந்ததும் இதற்குத் தக்க உதாரணங்களாகும்.

தேசத்தின் விடுதலைக்கு இன ஐக்கியத்தின் அவசியத்தை உணர்ந்து அதற்காகப்பாடுபட்டதோடு, அதற்காகவே வாழவும் விரும்பினார். சிங்களவரும் தமிழரும் இனவேறுபாடு அற்று வாழ வேண்டும் என்று விரும்பியவர். இரு இனத்தவராலும் தங்கள் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்த் தலைமை இவர்.

சேர். பொன். இராமநாதனால் ஆண் களின் கல்வி மேம்பாட்டுக்காக உருவாக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகப் பெருஞ் சிறப்புடன் மிளிர்கின்றது. அவர் கனவு கண்ட இந்துப் பல்கலைக்கழகம் இதுவரை உருவாகாது விடினும் இந்து நாகரிகம், சைவசித்தாந்தம், சமஸ்கிரு தம் ஆகிய கற்கைப் புலங்களை உள்ள டக்கிய இந்துக் கற்கைகள் பீடத்தைக் கொண்ட இலங்கையின் தனித்துவம் மிக்கதொரு பல்கலைக் கழகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திகழ்கின்றமை சிறப்பானதாகும்.

"ஆணொடு பெண்ணும் சரிநிகர் சமானமாக" வாழ வழிவகுத்தார். சேர்.பொன். இராமநாதன். சுதேச சைவ மகளிர் தம் பண்பாட்டுச் சூழலில் கல்வி கற்க ஒரு பாடசாலையை நிறுவ விரும்பினார். அதன் பயனாக 1913ஆம் ஆண்டு ஜனவரி 20 இல் மருதனார் மடத்தில் மகளிர் கல்லூரி ஒன்றை நிறுவினார். அதுவே இந் நாளில் இராமநாதன் மகளிர் கல்லூரி எனலாயிற்று.

அவர் முதன்முதல் உருவாக்கிய கல்லூரி இம்மகளிர் கல்லூரியே என்ப தன் வழி பெண்களின் கல்வியறிவின் அவசியத்தை உணர்ந்து செயலாற்றியமை கவனிக்கத் தக்கதாகிறது. வீட்டைவிட்டு வெளிவராத பண்பாட்டின் பெயராலான, அவ்விறுக்கமான சூழலில் வீட்டிலிருந்து கற்பதற்கு சமமான விடுதிகளை உருவாக்கினர். சைவ இலக்கியங்களையும், சுதேச நூல்களையும் பாடக் கலைத்திட்டத்தில் இணைத்ததோடு ஆங்கில அறிவையும் பெற வழிசமைத்தார்.

சேர். பொன். இராமநாதனின் ஞானக்குருவாக தஞ்சாவூரைச் சேர்ந்த அருட்பரானந்த சுவாமிகள் விளங்கினார். இவரின் அருட்பார்வையினால் இவர் தவயோகியாகவே மாறிவிட்டார். பகவத்கீதை கூறும் கருமயோகத்தின் வழித்தடத்தில் இவரின் பிற்கால வாழ்க்கை அமைந்துவிட்டது.

தியான யோக சாதனைகளில் தமது நேரத்தைக் கழித்தார்.இவரின் சீரியயோக சிந்தனைகளை நினைவு படுத்துவதற்காகவே இந்துக்கற்கைகள் பீட வரைபில் யோக நெறி ஒரு தனித்துறையாக அமைய சிபார்சு செய்யப்பட்டது.

சேர். பொன். இராமநாதன் சைவசித்தாந்த வித்தகராக விளங்கினார். அவரிடம் காணப்பட்ட சைவ சித்தாந்த புலமையின் காரணமாகவே சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் முதல் மாநாட்டுக்கு (1906) இவர் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்.

சுவாமி விவேகானந்தர் வேதாந்த மெய்யியலை அமெரிக்கா, இலண்டன் போன்ற நாடுகளில் பரப்புரை செய்தது போன்று சேர். பொன் இராமநாதன் சைவ சித்தாந்த மெய்யியலை மேலைத் தேச நாடுகளில் பரப்புரை செய்த பெருமைக்குரியவராக விளங்கினார்.

இந்துக்கற்கைகள் பீடத்தில் இடம்பெற்றுள்ள சைவ சித்தாந்தத்துறை அவரின் மிகவிருப்பமான சிந்தனைக்கு பெருமை சேர்ப்பதாக அமைகின்றது.

இலங்கையில் சைவசித்தாந்தம் என்ற பெயரில் ஒரு துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மட்டும் அமைந்திருப்பது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும், சேர்.பொன்.இராமநாதனுக்கும் பெருமை சேர்ப்பதாக அமைகின்றது.

சேர். பொன். இராமநாதன் பன்மொழிப் பாண்டித்தியம் உடையவராக விளங்கியதை அவரது நூலாக்கப்பணிகள், மொழி பெயர்ப்புப் பணிகள் எடுத்துக்காட்டுகின்றன.

குறிப்பாக, தமிழ் இலக்கண வித்தகராகத் திகழ்ந்தமையை அவரின் செந்தமிழ் இலக்கணம் எனும் நூல் புலப்படுத்தி நிற்கின்றது. வடமொழியில் புலமைத்து வமாகத் திகழ்ந்ததை அவரின் பகவத்கீதா தமிழ் மொழிபெயர்ப்பும், விருத்தியுரையும் எனும் நூல் மூலம் அறியலாம்.

இலங்கையில் கொழும்பில் முற்றிலும் கருங்கல்லினால் சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ள ஒரேயொரு கோயில் பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் ஆகும். இக்கோயில் 1856 இல் அருணாசலம் பொன்னம்பலம் முதலியாரால் கட்டப்பட்டது. பின் இவரின் மைந்தன் சேர்.பொன். இராமநாதன் சிறப்புற கட்டி முடித்தார்.

இவர் தமிழகத்தில் முருகனுக்கு அமைத்த கோயிலாக கொடைக்கானல் குறிஞ்சியாண்டவர் கோயில் விளங்குகின்றது. இலங்கையில் மட்டுமன்றி தமிழகத்திலும் கோயில் அமைத்த சிறப்புக்குரியவராக சேர்.பொன்.இராமநாதன் விளங்குகின்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அத்திபாரமாக அமைந்துள்ள பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுநரும், சைவப் பெருவள்ளலாருமான சேர்.பொன்.இராமநாதனின் தொன்னூறாவது குருபூசை தினவிழா இன்றாகும்.

பன்முக ஆளுமை கொண்ட சேர்.பொன்.இராமநாதனின் குருபூசை தின விழா, சேர்.பொன்.இராமநாதன் நினைவுப் பேருரை மற்றும் சீமாட்டி லீலாவதி இராமநாதனின் நினைவுப் பேருரை என்பவற்றை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் வருடாவருடம் நிகழ்த்துவது மட்டற்ற மகிழ்வைத் தருகின்றது.

இவையாவற்றுக்கும் மேலாக சேர்.பொன்.இராமநாதனின் திருநாமத்துட னேயே அவைக்காற்றுகைக் கலைகளுக்கான பீடம் அமையவிருப்பதும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

**கலாநிதி திருமதி சுகந்தினி சிறிமுரளிதரன், பீடாதிபதி, இந்துக்கற்கைகள் பீடம், யாழ். பல்கலைக்கழகம்**

# கொரோனாவால் வெளிநாடுகளில் உயிரிழந்தவர்களின் உறவுகளுக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

கொவிட் -19 வைரஸ் தொற்றுநோய் நெருக்கடி நிலைமையில் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் அவர்களின் சேவைக்காலத்தில் அந்தந்த நாடுகளிலேயே வைரஸ் தொற்றுநோய் காரணமாக உயிரிழக்க நேர்ந்திருந்தால் இறந்தவரின் உறவினர்களுக்கு நட்டஈடு பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்படுமென தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை, வாய்மூல வினாக்கான விடை நேரத்தில், வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் குறித்தும், கொவிட் -19 வைரஸ் பரவல் நிலைமையில் அவர்கள் தொடர்பில் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் என்னவென்றும் எதிர்க்கட்சி உறுப்பினர் சமிந்த விஜயசிறி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளில் பணிபுரியும் பணியாளர்கள் தாம் பணிபுரியும் காலத்தில் கொவிட் -19 வைரஸ் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டு இலங்கைக்குத் திரும்பியிருந்தால் அவர்களுக்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக நட்டஈடு பெற்றுக்கொடுக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் சுட்டிக்காட்டினார். (ஐ-4)



## குற்றப்பத்திரிகை இரத்து

(கொழும்பு)

ஜனக பண்டார தென்னகோனிற்கு எதிரான குற்றப்பத்திரிகை இரத்து செய்யப்பட்டது. 1999 ஆம் ஆண்டில் நடந்த கொலைச்சம்பவம் தொடர்பில் அமைச்சர் ஜனக பண்டார தென்னகோனிற்கு எதிராக சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை சட்டத்திற்கு முரணானது என தெரிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் அத்னை இரத்து செய்துள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் நீதிபதி ஏ.எச்.எம்.டீ.நவாஸ் மற்றும் சோபித ராஜகருணா ஆகியோரால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 16.11.2020 - 15.12.2020

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



சார்வரி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சூரியன், கேது மற்றும் சந்திரனோடு இணைந்து சஞ்சரிக்கின்றார். வாக்கு ஸ்தானாதிபதி புதன், சுக்கிரன் வீட்டில் பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கின்றார். 5 ஆம் இடத்திற்கு அதிபதியான குருவும் சனி வீட்டில் பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கின்றார். எனவே பொருளாதார நிலை சிறப்பாகவே இருக்கின்றது. தொழில், உத்தியோகத்தில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்.

### துலாம் இராசியில் சுக்கிரன் சஞ்சாரம்

நவம்பர் 17 ஆம் திகதி, துலாம் இராசிக்கு சுக்கிரன் வருகின்றார். அங்குள்ள புதனோடு சேர்ந்து 'புத -சுக்கிர யோகத்தை உருவாக்குகின்றார். எனவே புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாக முடியும். மாமன், மைத்துனர்வழியில்ஏற்பட்ட மனக்கசப்புகள்மாறும். சேமிப்பு உயரும். திடீரென குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவடைவதற்கான அறிகுறிகள் தென்படும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள்.

### செவ்வாய் வக்கிர நிவர்த்தி காலம்

நவம்பர் 24 ஆம் திகதி, மீனத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகின்றார். இக்காலத்தில் கொஞ்சம் விழிப்புணர்ச்சியுடன் செயற்படுவது நல்லது. அஷ்டமத்தில் செவ்வாய் பலம் பெறும் இந்த நேரத்தில், ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்படலாம். அதிக முயற்சி எடுத்தாலும் கூட, சில காரியங்கள் முடிவடையாமல் போகலாம். முறையான பரிகாரங்களும் வழிபாடுகளும் இக்காலத்தில் முன்னேற்றத்திற்கு வழி வகுத்துக் கொடுக்கும்.

### விருச்சிக புதன் சஞ்சாரம்

## தொழில், உத்தியோகத்தில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்

நவம்பர் 25 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். தனலாபாதிபதியான புதன், சுக ஸ்தானத்திற்கு வரும் நேரம் நல்ல நேரம்தான். வருங்கால முன்னேற்றத்தைக் கருதி எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். வீடு வாங்கும் யோகம் உண்டு. சம்பள உயர்வும் பதவி உயர்வும் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். பழைய வாகனத்தை கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்கள் வாங்க முயற்சிப்பீர்கள்.




### மேஷ செவ்வாய் சஞ்சாரம்


டிசெம்பர் 9 ஆம் திகதி மேஷ இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு யோகம் தரும் கிரகம் செவ்வாய். அவர் சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் பொழுது தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். உடன் பிறந்தவர்களும் உடன் இருப்பவர்களும் உங்களுக்கு உறுதுணையாக விளங்குவர். வீடு மாற்றம், நாடு மாற்றம் பற்றிய சிந்தனை ஒரு சிலருக்கு உருவாகும்.

### தனுசு புதன் சஞ்சாரம்

டிசெம்பர் 12 ஆம் திகதி, தனுசு இராசிக்குப் புதன் செல்கின்றார். இக்காலத்தில் பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். சுபகாரியங்கள் சிறப்பாக நடைபெறும். பூர்வீக சொத்துக்களை பங்கிட்டுக் கொள்வதில் இருந்த தடைகள் அகலும். உறவினர் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சியும் வெளிநாடு சென்று பணிபுரிவதற்காக எடுத்த முயற்சியும் பலன் தரும் நேரமிது. இம்மாதம் சங்கடஹர சதுர்த்தியன்று விரதமிருந்து தும்பிக்கையானை நம்பிக்கையோடு வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

பரிவர்த்தனை யோகத்தோடு பிறக்கும் இம்மாதத்தில் பணத் தேவை பூர்த்தியாகும். கணவன் - மனைவிக்குள் பாசமும் நேசமும் அதிகரிக்கும். சொத்துக்கள் வாங்கும் முயற்சி கைகூடும். பெண் பிள்ளைகளின் சுபச்சடங்கும் திருமண வாய்ப்புகளும் எதிர்பார்த்தபடி அமையும். நீண்ட நாட்களாக வராத சம்பளப் பாக்கிகள் வரலாம். வேலையை விட்டுவிட்டு தொழில் தொடங்கும் முயற்சி கைகூடும். ஆனைமுகன் வழிபாடு ஆனந்தம் வழங்கும்.



சார்வரி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன், தன ஸ்தானத்தில் சுக்கிரனோடு இணைந்து பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கின்றார். அது மட்டுமல்லாமல் சுக ஸ்தானாதிபதியாக விளங்கும் குரு, பஞ்சம ஸ்தானாதிபதியாக விளங்கும் சனி வீட்டில் பரிவர்த்தனை பெற்றுள்ளார். எனவே தனவரவு திருப்தி தரும். தடைகள் விலகும்.

### துலாம் இராசியில் சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், சுக்கிரன். அவர் நவம்பர் 17 ஆம் திகதி துலாம் இராசியில் உள்ள புதனோடு சேர்கின்றார். எனவே 'புத-சுக்கிர யோகம்' உருவாகின்றது. அதன் பலனால் சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. வாடகை கட்டடத்தில் நடக்கும் தொழிலை சொந்தக் கட்டடத்திற்கு மாற்ற முன்வருவீர்கள். கல்யாணம், காதுகுத்து, மணிவிழா, கிரகப்பிரவேசம் போன்றவை ஒவ்வொன்றாக நடைபெறும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வும் சம்பள உயர்வும் கேட்காமலேயே கிடைக்கலாம்.

### செவ்வாய் வக்கிர நிவர்த்தி காலம்

உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், செவ்வாய். அவர் மாதத் தொடக்கத்தில் வக்கிரம் பெற்று மீன இராசியில் சஞ்சரிக்கின்றார். எனவே உங்கள் திறமைக்கேற்ற பலன் கிடைக்காது. சகோதர வர்க்கத்தினர் உங்களுக்கு எதிராக செயற்படுவர். கூட்டு முயற்சியில் மாற்றம் ஏற்படலாம். உங்களுக்கோ, உங்களைச் சார்ந்தவர்களுக்கோ மருத்துவச் செலவு அதிகரிக்கும். வாகனங்களில் செல்லும்பொழுது கவனம் தேவை.

## தனவரவு திருப்தி தரும், தடைகள் விலகும்

### விருச்சிக புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிநாதன் புதன், நவம்பர் 25 ஆம் திகதி விருச்சிக இராசிக்குச் செல்கின்றார். அங்குள்ள சூரியனோடு இணைந்து 'புத ஆதித்ய யோக'த்தை உருவாக்குகின்றார். எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். 'பட்ட மேற்படிப்புக்கு இடம் கிடைக்கவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கும், 'வெளிநாடு சென்று கல்வியைத் தொடரமுடியவில்லையே' என்று நினைத்தவர்களுக்கும் இப்பொழுது நல்ல தகவல் வரப்போகின்றது.

### மேஷ செவ்வாய் சஞ்சாரம்




டிசெம்பர் 9 ஆம் திகதி, மேஷ இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். அஷ்டமாதிபதி, அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் மிகுந்த விழிப்புணர்ச்சி தேவை. மூட்டுவலி, முழங்கால் வலி என்று ஏதாவது ஒரு தொல்லை தினமும் வந்து கொண்டேயிருக்கும். ஒருசிலருக்கு அறுவைச்சிகிச்சை செய்யும் சூழ்நிலையும் உண்டு. பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு வீண்பழிகள் ஏற்படும். பிறருக்கு நன்மை செய்தாலும் தீமையாகத் தெரியும் நேரமிது.

### தனுசு புதன் சஞ்சாரம்

டிசெம்பர் 12 ஆம் திகதி, உங்கள் இராசிநாதன் புதன் தனுசு இராசிக்குச் செல்கின்றார். அங்கிருந்து கொண்டு தொழில் ஸ்தானத்தை பார்க்கப் போகின்றார். எனவே தொழில் வளம் சிறப்பாக இருக்கும். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து பொருளாதார விருத்திக்கு அடித்தளம் அமைத்துக் கொடுப்பர். புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டு. பழைய கடன் சுமையில் இருந்து மீளும் வாய்ப்பு உண்டு.

இம்மாதம் திருவோண நட்சத்திர நாளில் விரதமிருந்து திருமாலை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் இராசிநாதன் பரிவர்த்தனை யோகம் பெற்றிருப்பதால், நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். பிள்ளைகளின் முன்னேற்றம் திருப்தி தரும். கணவன்-மனைவிக்குள் இணக்கம் கூடும். மேஷ செவ்வாயின் ஆதிக்க காலத்தில் நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட வகையில் பாதிப்புகள் ஏற்படலாம்.

பணிபுரியும் பெண்களுக்கு திறமை பளிச்சிடும். மேலதிகாரிகள் கேட்ட சலுகைகளை வழங்குவர். லட்சுமி வழிபாடு இனிமை சேர்க்கும்.

(தொடரும்)

# பொருளாதாரத்தை மேம்படுத்த 'அழகிய கிராமம்' செயற்றிட்டம்



**(கொழும்பு)**

**நிதி நெருக்கடியில் பாதிக்கப்பட்டுள்ளவர்களை மீட்டெடுப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. அதற்கமைய, அடுத்த வருடம் முதல் செயற்படுத்தப்படவுள்ள "அழகிய கிராமம்" திட்டத்திற்கென 5.3 பில்லியன் நிதி வரவு - செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட் டுள்ளதாக சமுர்த்தி, நுண்கடன் மற்றும் தொழில் முயற்சி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட 100 சமுர்த்தி பயனாளர்களுக்கு 27 மில்லியன் பெறுமதியான வணிகக்கடன் மற்றும் தொழில்சார் உபகரணங்கள் கடந்த புதன் கிழமை மத்திய நுவரகம பிரதேச செயலகப் பிரிவின் ஊடாக வழங்கி வைக்கப்பட்டது. இதன் போது 2 இலட்சம் தொடக்கம் 10 இலட்சம் வரையில் சமுர்த்தி கடன்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய உற்பத்திகளை மேம்படுத்த அரசாங்கம் பல செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளது. அந்த வகையில் நாடளாவிய ரீதியில் உள்ள 5000 கிராமங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த 2021 ஆம் ஆண்டு தொடக்கம் அழகிய கிராமம் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கு 5.3 பில்லியன் நிதி வரவு - செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. குறைவான வட்டி வீதத்தில் தொழில் முயற்சியாளர்களுக்கு வணிகக் கடன்களை வழங்குமாறு நிதி நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## தப்பியோடிய தாயும் மகனும் சிக்கினர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், தப்பியோடிய தாயும் மகனும் எஹலியகொட பகுதியில் சிக்கியுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட எஹலியகொட பகுதியைச் சேர்ந்த இவர்கள் இருவரும் கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தநிலையில், தப்பிச் சென்றனர்.

இவ்வாறு தப்பிச் சென்றவர்களைத் தேடும் பணிகளில் அதிகாரிகள் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

இதனையடுத்து அவர்கள் எஹலியகொட, யாபா வீதியில் அமைந்துள்ள வீடொன்றிலிருந்து நேற்றுக் காலை பிடிபட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ-4)

## முகக்கவசங்கள் நாட்டில் தயாரிப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக, நாட்டில் அதிகளவு கேள்விக்கு உள்ளாகியுள்ள முகக்கவசங்களை, நாட்டில் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன்பிரகாரம், இறக்குமதி செய்யப்படும் முகக்கவசங்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது..

நாடளாவிய ரீதியில், ஒரு நாளைக்கு 1.5 மில்லியன் முகக்கவசங்கள் பயன்பாட்டில் இருப்பதாகவும் இந்த முகக்கவசங்கள், சீனா உள்ளிட்ட மற்றைய பல நாடுகளில் இருந்து தினமும் இறக்குமதி செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் நாட்களில், KN95 முகக்கவசங்களையும் நாட்டில் தயார் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஐ-4)

## 16 குடும்பங்கள் வெளியேற்றம்

(கொழும்பு)

மண்சரிவு எச்சரிக்கையினை அடுத்து அப்புத்தள பகுதியில் இருந்து 16 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளதாக அப்புத்தள பிரதேச சபைப் தெரிவித்துள்ளது.

குறித்த பகுதியில் ஏற்பட்ட மண்சரிவால் கல்கந்தவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 16 குடும்பங்களைச் சேர்ந்த 70 பேர் நேற்று முன்தினம் பிற்பகல் வெளியேற்றப்பட்டதாகவும் இவ்வாறு வெளியேற்றப்பட்ட குறித்த குடும்பங்கள் தம்பதெனியவில் உள்ள பாடசாலை ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபை மேலும் தெரிவித்துள்ளது.(ஐ-4)

## 148 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல்காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 148 இலங்கையர்கள் நாடு திரும்பினர்.

அதன்படி, ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து 83 பேரும் டோஹாவிலிருந்து ஒருவரும் அவுஸ்திரேலியாவின் சிட்னியிலிருந்து 52 பேரும் ஜப்பானின் நரிட்டோவிலிருந்து 12 பேரும் நாட்டை வந்தடைந்தனர்.

இவ்வாறு வந்தடைந்த பயணிகளுக்கு பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து, அவர்களை தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டது.(ஐ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனமும் சிந்தனையும்

ஒருத்தரைப் பார்த்து உன்னுடைய நண்பர்கள் யார்? என்று ஒரு கேள்வி கேட்டுப் பாருங்கள்..கொஞ்சம் யோசித்து யோசித்து பதில் சொல்லுவார். அவரிடம் உன்னுடைய எதிரிகள் யார்? என்று கேளுங்கள் கடகட என்று ஒப்பிப்பார்.

எங்கள் மனது இருக்கின்றதே..அது எப்படி என்றால்..எங்கள் நண்பர்களைவிட எதிரிகளை அது நன்றாக நினைவிலே வைத்திருக்கும். இது ஒரு ஆச்சரியமான உண்மை.உங்களால் நண்பர்களை மறந்துவிட முடியும். ஆனால் எதிரிகளை மறந்துவிட முடியாது.

இது ஒரு வேடிக்கையான நிலை தான். அழகான தருணங்களை நாம் ஏன் மறந்துவிடுகின்றோம்? இது இயற்கை என்றால்... எங்கள் மனது மலர்களை கவனிப்பது இல்லை. முட்களைத் தான் கவனிக்கின்றது. தன்னைக் காயப்படுத்துகின்ற எதையும் அது உடனே கண்டு கொள்கின்றது.

ஒரு தெளிந்த சிந்தனையுடைய மனம் மிக அழகாக உள்ள எல்லாவற்றையும் கவனிக்கும்.

தான் நன்றியுடன் உணரக்கூடிய எல்லாவற்றையும் பார்த்துக் குறித்துக் கொள்ளும்.

இப்படிப்பட்டவர்கள் வாழ்க்கை இயல்பாகவே நன்றாக அமையும்.

மனதிலே உள்ள ஒரு சிறிய அமைப்பை மாற்றுவதைப் பொறுத்தது தான் இந்த விடயம். அப்படி என்கின்றார் ஓஷோ.ஒரு யூதர் கோயில் இருந்தது. அது யூதர்களின் மடமாகவும் இருந்தது. அங்கே ஒரு தலைமை குரு. அவர் மிகவும் கண்டிப்பானவர்.

அந்த கோவிலை ஒட்டி ஒரு தோட்டம்.ஒரு நாள் காலையில் அந்தத் தோட்டத்திலே இரண்டு இளம் யூதர்கள் நடந்து போய் கொண்டிருந்தார்கள். காலையிலே ஒரு மணி நேரம்,மாலையில் ஒரு மணி நேரம் அவர்கள் அந்த தோட்டத்திலே நடக்க அனுமதி உண்டு. ஏனைய நேரங்களிலே அவர்கள் மத புத்தகங்களைப் படிக்க வேண்டும். பிற விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அந்த இரண்டு பேருமே தொடர்ந்து புகைப்பிடிக்கின்ற பழக்கம் உள்ளவர்கள்; ஆனால் கோயில் மடத்திலே இருக்கின்ற பொழுது அவர்கள் புகைப் பிடிக்க முடியாது.அது கடுமையான குற்றம்.

சரி நாம் தோட்டத்திலே இருக்கின்ற பொழுதாவது புகைப்பிடிக்கலாமா? என்று ஒரு ஆசை அவர்கள் இரண்டு பேருக்குமே இருந்தாலும் பயம்! இப்படிக் கேட்டால் மதகுரு என்ன செய்வாரோ என்கின்ற பயம்.இப்படி கொஞ்சநாள் ஆகிவிட்டது.

ஒரு நாள் அந்த இரண்டு பேரிலே ஒருத்தன் மிகக் கலங்கி போய் அந்தக் கோயிலிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தான். வந்தவன் நேராக தோட்டத்துப் பக்கம் போனான். அங்கே-இன்னொருவன் ஆனந்தமாக புகைப் பிடித்துக் கொண்டிருந்தான். அதைப் பார்த்ததும் இவனுக்கு அதிர்ச்சி.அடக்கடவுளே என்ன இது நீ கேட்காமலே ஆரம்பித்துவிட்டாயா? என்றான்.இல்லையே...நான் கேட்டுவிட்டேன். என்றான் அவன்.

அப்படியா..என்ன மனிதன் இவர் . நானும் தான் கேட்டேன் என்னை கன்னாபின்னான்னு திட்டிவிட்டார். இது என்ன கோயிலா... நரகமா? உனக்குப் புகைப் பிடிக்க வேண்டும் என்று ஆசையா இருந்தால் நரகத்துக்குப் போ..என்றார்.

அது சரி...உன்னை மட்டும் எப்படி அனுமதித்தார் என்று கேட்டான் இவன்.

அவன் சிரித்துக் கொண்டே நீ எப்படி கேட்டாய் சொல்லு என்றான்.

நாம் இந்தத் தோட்டத்திற்கு வர அனுமதிக்கப்பட்டிருக்கின்றதே ஜெபத்துக்காகத் தானே..அதனாலே நான் ஜெபம் சொல்லும் போது புகைப்பிடிக்கலாமா? என்று சும்மா கேட்டேன்.

அதற்குத் தான் அவர் சத்தம் போட்டு என்னை அடிக்கவே வந்துவிட்டார் என்றான் இவன்.நீ ஒரு மாதிரியாக கேட்டிருக்கின்றாய். நான் வேறு மாதிரியாக கேட்டிருக்கின்றேன். ஜெபம் சொல்லும் போது புகைப்பிடிக்கலாமா? என்று நீ கேட்டிருக்கின்றாய்...ஐயா... புகைப் பிடிக்கும் போது ஜெபிக்கலாமா?என்று நான் கேட்டேன். அதிலே தவறேதும் இல்லை என்று பதில் சொன்னார் என்றான். ஒரு சிறிய மாற்றம் தான்...அது மிகப் பெரிய மாறுதலை ஏற்படுத்து விடுகின்றது. மனம் நல்ல விதமாக சிந்திக்க ஆரம்பித்துவிட்டால் மகிழ்ச்சிக்கு பஞ்சம் இல்லை.

ஒரு கஞ்சன் ஆற்றிலே விழுந்து விட்டான். வெள்ளத்திலே தத்தளித்துக் கொண்டிருக்கின்றான். கரையிலே நின்ற ஒருத்தர்... உன் கையை கொண்டா இப்படி.. பிடித்து இழுத்து கரையிலே சேர்த்து விடுகின்றேன் என்றார்.எதையும் கொடுத்துப் பழக்கமில்லாத அவன் கையையும் கொடுக்க மாட்டேன் என்று விட்டான். இவர் பார்த்தார்.உன் கையைக் கொடு என்று சொல்வதற்குப் பதிலாக நான் என் கையைக் கொடுக்கின்றேன் பிடித்துக் கொள் என்றார் கப் என்று பிடித்துக் கொண்டான். இழுத்துக் கரையிலே போட்டுவிட்டார்.

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—221

# உலக விஞ்ஞான தினம் 2020



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

நேற்றைய தினம் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் **(National Science Foundation)** உலக விஞ்ஞான தினம்- 2020 இணையவழி கருத்தரங்கு மூலமாக சிறப்பாக பாடசாலை மாணவர்களை மையப்படுத்தி நடந்தேறியிருக்கின்றது.

இதில் காலையில் பாடசாலை மாணவர்களுக்கு சிங்கள மொழிமூலமும் மாலையில் தமிழ்மொழி மூலமும் தெரிவு செய்யப்பட்ட புலமையாளர்களிடமிருந்து விஞ்ஞானத்தை பயன்படுத்தி தேசத்தை அபிவிருத்தி செய்வோம் என்னும் கருப்பொருளில் நடத்தப்பட்டது.

ஆரம்ப உரையை தேசிய விஞ்ஞான மன்றத்தின் தலைவரும் முன்னைநாள் ருகுணு பல்கலைக்கழகத்தின் துணை வேந்தருமான பேராசிரியர் ரஞ்சித் சேனாரட்ன விஞ்ஞானத்தின் பங்களிப்பைப் பற்றியும் அதனது பிரயோகத்தினால் எமது நாட்டில் ஏற்படுத் தப்படும் அபிவிருத்தியைப் பற்றியும் உரையாற்றினார்.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக திறன் விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரதி அமைச்சர் கலாநிதி சீதா அரம்பேபொல கலந்து கொண்டு மாணவர்களுக்கு உரையாற்றினார்.

இந்நிகழ்வுக்கு விசேட உரையாற்றிய அமெரிக்காவின் சிக்காக்கோ நகரிலமைந்துள்ள இலினொய்ஸ் பல்கலைக்கழகத்தின் பௌதீகவியல் பேராசிரியரும் விஞ்ஞானியுமான பேராசிரியர் சிவா சிவாநந்தன் தொடர்ந்து இலங்கையின் தேசிய விஞ்ஞான மன்றத்துடனும் இலங்கைப் பல்கலைக்கழகங்களுடனும் இணைந்து விஞ்ஞானத்தின் பங்களிப்பை அதிகரிக்க விரும்புவதாக தெரிவித்திருந்தார்.

அவர் கற்ற சாவகச்சேரி பாடசாலைக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் அதிக பங்களிப்பை இதுவரையிலும் வழங்கியிருக்கின்ற அவர் மாணவர்களுக்கான மொபைல் கருவிகளை பயன்படுத்துவதற்கான வசதிகளையும் ஏற்படுத்தியிருக்கின்றார்.

இவர்களின் உரையைத் தொடர்ந்து இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் பௌதீகவியல் துறைத் தலைவர் கலாநிதி என் கார்த்திகேயன் "தற்கால ஆராய்ச்சியின் வரலாறும் அதனது தாக்கமும்" என்னும் தலைப்பில் உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து பேராசிரியர் மிகுந்தன் "மாண வர்களை ஆராய்ச்சியில் இணைத்தல்" என்னும் தலைப்பிலும் பேராசிரியர் ரவிராஜன் "கண்டுபிடிப்பாளராவது எப்படி" என்னும் தலைப்பிலும் உரையாற்றினார்கள்.

அவர்களைத் தொடாந்து கடந்த வருடம் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மாணவர்களுக்கான ஆய்வு திட்டத்தில் கலந்து பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்ற யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் மாணவான் சூரியகுமாரன் துவாரகன், களுவாஞ்சிக்குடி பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தின் மாணவன் சித்தாசன் வரதராஜனும் தங்களது ஆராய்ச்சி பற்றிய அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

இவர்களைத் தொடர்ந்து திருகோணமலை கலைமகள் மகா வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆசிரியர் அ. முகுந்தனும் தமது மாணவர்களுடனிணைந்து செய்த ஆய்வின் அனுபவம் பற்றி விளக்கமளித்தார்.

சிறப்பாக நடந்தேறிய விஞ்ஞான ஆய்வினைப் பற்றியும் மாணவர்களை ஊக்குவிக்கும் போது அதிலிருந்து மாணவர்களின் ஆய்வுத்திறனை அளவிட முடிந்ததாகவும் ஆய்வில் ஈடுபட்ட மாணவர்களைப் பாராட்டுவதாகவும் கூறியிருந்தார்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 304




உலக விஞ்ஞான தினம் ஐக்கிய நாடுகள் தாபனத்தினால் உலக அமைதிக்காகவும் உலக மக்களின் சுகாதாரத்திற்குமாக வருடாவருடம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

எமது நாட்டின் அபிவிருத்திக்காக நாம் அனைவரும் இணைந்து பல கண்டுபிடிப்புக்களை எமது மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கும் அதன் மூலமாக நாட்டின் அபிவிருத்திக்கும் அனைவரும் குறிப்பாக பாடசாலை மாணவர்களும் பங்காற்ற முடியும்.

மாணவர்களது ஆய்வறிவுத் திறனை மேம்படுத்துவதற்காக பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆய்வு நிறுவனங்களை பாடசாலைகளுடன் இணைக்க வேண்டியது அவசியமாகின்றது.

இதன்மூலம் மாணவர்களிடையே ஆய்வுத் திறன் பற்றிய ஆர்வத்தை ஏற்படுத்த முடியும்.

மாணவர்களை பாடசாலை மட்டத்திலேயே ஆய்வினை செய்வதற்கு இணைத்துக் கொள்வதன் மூலம் அவர்களின் ஆர்வத்திற்கிணைவாக தேவையான வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களை மேலும் ஆய்வு செய்யத் தூண்டுவதன் மூலம் ஆய்விற்கான சிறந்த விதையை விதைப்பதாகவே அமையும்.

உலக விஞ்ஞான தினம் தற்போது நாம் அல்லல் பட்டுக்கொண்டிருக்கும் கொரோனா வைரஸின் தாக்கத்தினால் ஏற்பட்ட இடைவெளியை விஞ்ஞானத்தின் பயன்பாட்டின் மூலம் ஓரளவிற்கு வென்றிருக்கின்றோம்.

தொடர்பாடல் இணையவழி மூலமும் மொபைல் தொழில்நுட்பத்தின் மூலமும் மக்களை இணைப்பதற்கும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் குறிப்பாக உணவளிக்கவும் அவர்களது சுகாதாரத்தை மேம்படுத்தவும் முடிந் திருக்கின்றது என்றால் மிகையாகாது.

இன்னும் நாம் எமது வாழ்வுக்காக பல கண்டுபிடிப்புக்களை உருவாக்கி அதில் மாணவர்களையும் ஈடுபடுத்தி இந்த நாளை சிறப்பாக கொண்டாடுவோமாக.

‘சியபத’ வீடமைப்பு விஸ்தரிப்பு

# நாடளாவிய ரீதியில் 16 ஆயிரம் வீடுகள்



**(கொழும்பு)**

**“சியபத” என்னும் வீடமைப்புத் திட்டம் நாடளாவிய ரீதியில் விஸ்தரிக்கப்படவுள்ளதாக கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த தெரிவித்தார்.**

இந்த வீடமைப்புத் திட்டம் ஏற்கனவே கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்படி கம்பஹா மாவட்டத்தில் 5 மாடிகளையும் 100 வீடுகளையும் கொண்டதாக இந்த சியபத வீடமைப்பு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த சியபத வீடமைப்புத் திட்டம் நாட்டின் 160 தேர்தல் தொகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் இதற்கமைய நாடளாவிய ரீதியில் 16 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளதாகவும் அடுத்த வருட இறுதிக்குள் அனைத்து வீடுகளையும் கட்டி முடிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# ஆலய வழிபாடு
## ஏன் – எதற்கு – எப்படி
### மூல விக்கிரகம்

கருவறை சிறப்புப்பற்றி கடந்த பக்கங்களில் பார்த்தோம். கருவறையில் அமைக்கப்படும் மூலவர் பற்றி இனி காணலாம்.

மனிதனை இறைவனோடு தொடர்பு கொள்ளச் செய்வதே மூலவர் தான். மூலவருக்குரிய சிலையை விஞ்ஞான அடிப்படையில் வடிவமைக்க வேண்டும் என்பதை நம் முன்னோர்கள் தெளிவாக அறிந்திருந்தனர். இது தொடர்பான குறிப்புகளை அவர்கள் ரிக் வேதத்தில் எழுதி வைத்துள்ளனர். ஆலயங்களில் உள்ள மூலமூர்த்தியானது சிலா விக்கிரகம், சுதை மூர்த்தி, தாருக மூர்த்தி என்று மூன்று வகைப்படும்.

சிலா விக்கிரகங்கள் என்பவை கல் அல்லது உலோகத்தால் செய்யப்பட்டதாக இருக்கும். சுதை மூர்த்தி என்பது பலவித மூலிகை கலவைகளைக் கலந்து அதனுடன் தேன், சுண்ணாம்பு சேர்த்து உருவாக்கப்பட்டதாக இருக்கும். தாருக மூர்த்தி என்பது மரத்தினால் செய்யப்பட்ட மூல அமைப்பாக இருக்கும்.

இத்தகைய மூலவர்களை தமிழ்நாடு முழுவதும் உள்ள பழைமையான ஆலயங்களில் காணலாம். ஆனால் 99 சதவீத மூலவர் சிலைகள் கருங்கல்லில் தான் இருக்கும்.

ஆதிகாலத்தில் ஆலயங்கள் தோன்றும் முன்பே மூலவர்களை வடிவமைக்கும் கலையை தமிழர்கள் கற்றுக்கொண்டு விட்டனர். மலைக்காடுகளில் சுற்றித் திரிந்த அவர்களுக்கு எங்கு பார்த்தாலும் கருங்கற்களைத் தான் காண முடிந்தது.

எத்தனை நாட்களுக்குத் தான் அந்தக் கற்களையே பார்த்துக் கொண்டிருக்க முடியும்? அந்தக் கற்களில் இறைவடிவங்களைச் செதுக்கத் தொடங்கினார்கள்.

அதன்பிறகு தான் கருங்கல்லில் பஞ்சபூதங்களும் இருக்கும் அறிவியல் உண்மையை அறிந்தனர். நிலம், நீர், நெருப்பு, ஆகாயம், காற்று இந்த ஐந்தும் தான் பஞ்சபூதங்கள். ஒரு கல்லை மற்றொரு கல்லுடன் உராய்ந்தால் தீ வரும். எனவே தீ கருங்கல்லில் உள்ளது.

கருங்கற்கள் பொடி பொடியாக நொறுங்கும் போது மண்ணாக மாறுகிறது. இது நிலத்தைக் காட்டுகிறது. மலைக்காடுகளில் பார்த்தால் கல்லுக்குள் இருந்து தான் தண்ணீர் ஈரமாக கசிந்து வெளியில் வரும். ஆக கல்லுக்குள் தண்ணீரும் இருக்கிறது. கல்லுக்குள் தேரை உள்ளிட்ட உயிரினங்கள் வாழும்.

இதன் மூலம் கருங்கல்லில் ஆகாயமான வெற்றிடமும் சுவாசிக்க காற்றும் இருப்பது உறுதியாகிறது. இப்பிரபஞ்சத்தை காக்கும் கடவுள் பஞ்சபூத சேர்க்கையோடு தொடர்பு கொண்டவராக இருத்தல் வேண்டும் என்று சிந்தித்த தமிழர்களுக்கு கருங்கல் ஒன்றே அவர்களின் தேர்வாக இருந்தது.

இதைத்தான் மாணிக்கவாசகர் தான் எழுதிய திருவாசகத்தில்,

**பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி**
**நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி**
**தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி**
**வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி**
**வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி**

என்று பாடியுள்ளார். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## உர நிறுவனத்தின் முன்னாள் தலைவர் கைது

(கொழும்பு)

நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், இலங்கை உர நிறுவனத்தின் முன்னாள் தலைவர் கைது செய்யப்பட்டார்.

இதன்படி, குறித்த சந்தேகநபர், பத்தரமுல்லைப் பகுதியில் அமைந்துள்ள அவரது வீட்டில் வைத்து, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், இலங்கை உர நிறுவனத்தின் தலைவராக செயற்பட்ட நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தனியார் நிறுவனமொன்றிடம் இருந்து, இலங்கை உர நிறுவனத்திற்கு திரவ உரங்களை கொள்வனவு செய்ததில், 90 மில்லியன் ரூபா நிதி, முறைகேடு செய்யப்பட்டுள்ளதாக கடந்த 14 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## கொரோனா பாதுகாப்பு பட்டியலில் இலங்கை

(கொழும்பு)

பிரித்தானியாவின் பாதுகாப்பான கொரோனா வைரஸ் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவின் தனிமைப்படுத்தல் விதிக்கு அமைய வேறு நாடுகளில் இருந்து செல்பவர்கள் அங்கு 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தப்பட வேண்டும். எனினும் இலங்கை உட்பட ஐந்து நாடுகளுக்கு பிரித்தானியா விதிவிலக்கு அளித்துள்ளது.

அதற்கமைய இலங்கையிலிருந்து பிரித்தானியாவிற்கு செல்லும் பயணிகள், பிரித்தானியாவிற்கு சென்றதும் 14 நாட்களுக்கு தனிமைப்படுத்த வேண்டியதில்லை என அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் இஸ்ரேல், உருகுவே, நமீபியா, மற்றும் ருவாண்டா ஆகிய நாடுகளில் இருந்து பிரித்தானியாவிற்கு செல்பவர்கள் அங்கு சென்றதும் 14 நாட்கள் தனிமைப்படுத்தத் தேவையில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஜெருசலேம், பொனெய்ர், அமெரிக்க விர்ஜின் தீவுகள், சிண்ட் யூஸ்டேடியஸ் மற்றும் சபா மற்றும் வடக்கு மரியானா தீவுகளிலிருந்து வரும் பயணிகளுக்கும் இந்த விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 180 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 160 | 140 |
| தக்காளி | 140 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 90 | 80 |
| கோவா | 60 | 70 | 80 | 120 |
| கரட் | 140 | 200 | 200 | 240 |
| பூசணி | 80 | 70 | 60 | 80 |
| புடோல் | 80 | 70 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 280-320 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 170 | 180 | 200 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 80 | 70 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 100 | 100 |
| பயற்றங்காய் | 400 | 180 | 400 | 400 |
| லீக்ஸ் | — | 90 | 100 | 100 |
| பீற்றூட் | — | 90 | 80 | 100 |
| கறிமிளகாய் | 250 | 280 | 240 | 240 |
| முருங்கைக்காய் | 250 | 240 | 200 | 240 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 160 | 180 | 180 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 60-70 | 100 |
| தேசிக்காய் | 200 | 200 | 180 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 75-80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 300 | 250 | 280 |
| வெங்காயப்பூ | 250 | 280 | — | — |
| முள்ளங்கி | 60 | 60 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 100 | — | 100 |



# சிறுவர் அரங்கம்

## நன்றி கொன்ற ஓநாய்



ஒரு நாள் அடர்ந்த காட்டில் ஓநாய் வாழ்ந்து வந்தது. அதற்கு வசமான மாமிச வேட்டை கிடைத்தது.

ஆவலுடன் வேக வேகமாக இரையைத் தின்றது. அப்போது அதன் தொண்டையில் ஒரு எலும்பு சிக்கிக் கொண்டது.

வலி பொறுக்க முடியாமல் ஊளையிட்டுக்கொண்டே அங்கும் இங் கும் ஓடியது.

அப்போது ஒரு கொக்கு எதிரே வந்தது. அதனிடம் சென்ற ஓநாய் தனது தொண்டையில் மாட்டிக்கொண்ட எலும்பை எடுத்தால் தன்னிடம் உள்ள ஏராளமான பொன்னையும் பொருளையும் தருவதாக ஆசை வார்த்தை கூறி, உதவும்படி மிகவும் கெஞ்சியது.

ஓநாயின் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கிய கொக்கு உதவ முன் வந்தது. தனது நீண்ட அலகை ஓநாயின் வாய்க்குள் விட்டு எலும்பை எடுத்தது. சொன்னபடி பரிசு தரும்படி கொக்கு கேட்டது.


பரிசா! உனக்கு... நான் தருவதா? என்று ஏளனமாகச் சிரித்தது ஓநாய். மேலும் உன் கழுத்தைக் கடித்துக் கொல்லாமல் உயிருடன் உன்னை விடுவதே பெரிது.

மரியாதையாக இந்த இடத்தை விட்டு ஓடி விடு என்று விரட்டியடித்தது. நன்றியில்லாத ஓநாய்க்கு உதவியது பாவம் என்று எண்ணிக் கொண்டே கொக்கு தன் வழியே சென்றது.

**நீதி: ஆபத்தில் உதவியவனை அலட்சியப் படுத்தக்கூடாது.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## முதல் வெற்றி




டெமாஸ்தனிஸ்

அரிஸ்ரோட்டில் கேள்விப்பட்டால் எவ்வளவு மகிழ்வார். அன்னை ஒலிம்பியஸுக்கு எவ்வளவு பெருமையாக இருக்கும்.

பைஸாண்டியப் போர்க்களத்தில் இருந்த மன்னர் பிலிப்புக்கு அலெக்சாண்டரின் முதல் வெற்றி தேனாக இனித்தது. தன்னுடைய வீரர்களுக்குப் பரிசுகள் வழங்கி மகிழ்ச்சியைக் கொண்டாடினார்.

தன்னுடைய மகன் சரியான பாதையைத் தேர்வு செய்திருக்கிறான், அதுவும் வெற்றியோடு தன்னுடைய ஆட்டத்தைத் தொடங்கியிருக்கிறான் என்பதில் எல்லையில்லா சந்தோஷம் மன்னர் பிலிப்புக்கு. இல்லையில்லை தந்தை பிலிப்புக்கு.

அலெக்சாண்டரின் வெற்றியை எல்லோரும் மகிழ்ச்சி பொங்கப் பேசிக்கொண்டிருக்க, சிறுபிள்ளைகள் எல்லாம் கிரேக்கர்களிடம் விளையாடக்கூடாது என்ற ஒரு குரல் மாசிடோனியாவில் பதற்றத்தைக் கொண்டுவந்தது.

குரலுக்குச் சொந்தக்காரர் யார் என்று விசாரித்ததில் அவருடைய பெயர் டெமாஸ்தனிஸ் என்பதும் கிரேக்கம் அருளிய அற்புதமான பேச்சாளர் என்பதும் தெரிந்தது.

வசீகரம் மிக்க அவருடைய வார்த்தைகளுக்காக என்ன வேண்டுமானாலும் செய்து தருவதற்கு கிரேக்க மன்னர்கள் காத்திருக்கிறார்கள் என்பதும் அலெக்சாண்டருக்குப் புரிந்தது.

அதேசமயம் கிரேக்கர்கள்தான் உலகிலேயே உயர்ந்தவர்கள், மாசிடோனியர்கள் மட்டமானவர்கள் என்கிற அவருடைய குறுகலான சிந்தனைகளும் அலெக்சாண்டரின் கவனத்திற்கு வந்தன.

மனதுக்குள் சிரித்துக் கொண்டார் அலெக்சாண்டர். இவ்வளவு விரைவாக இரண்டாவது வெற்றிமாலை என் கழுத்தில் விழவேண்டுமென்றால் அதை யாரால் தடுக்க முடியும்? அதற்குக் காரணகர்த்தாவாக மாமேதை டெமாஸ்தனிஸ் மாற விரும்பினார் என்றால் அதைவிட வேறு என்ன சந்தோஷம் இருக்க முடியும்? என்று சொல்லிக்கொண்டே போருக்குத் தயாராக உத்தரவிட்டார் அலெக்சாண்டர்.

டெமாஸ்தனிஸ் இருக்கும் கிரேக்க நாட்டுக்குப் புறப்பட்டது மாசிடோனியப்படை. வெற்றி தேவதை இந்த முறையும் அலெக்சாண்டர் பக்கம்தான்.

(தொடரும்)

குறைகளை விட அதைத் திருத்தி அமைக்க வழி என்ன என்று கண்டுபிடியுங்கள். நிறைவாகச் செய்ய முயற்சித்தால் குறைகள் விழிப்புணர்வுடன் தடுக்கப்படும். – ஹென்றி ஃபோர்டு

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பாடசாலைகளை ஆரம்பித்தால்; மாணவர்கள் பக்குவம்

கொரோனாத் தொற்றின் அபாய கட்டம் நாளுக்கு நாள் உயர்ந்து செல்கின்றது.

கொரோனா காரணமாக இறப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

எனினும் அந்தந்த மாகாணங்களில் எடுக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக கொரோனாத் தொற்று பிரகண்டம் அடையாமல் தடுக்கப்பட்டு வருகிறது.

இருந்தும் கொரோனாத் தொற்றுடன் வாழப் பழகுவது தவிர்க்க முடியாது என்ற தீர்மானத்தை எடுத்துள்ள அரசாங்கம்,

கொரோனாவைத் திறந்த சந்தைக்கு விட முடிவு செய்துள்ளதுபோல் தெரிகிறது.

இதன் ஒரு கட்டமே எதிர்வரும் 23ஆம் திகதி பாடசாலைகளை ஆரம்பிப்பது என்ற அறிவிப்பாகும்.

பாடசாலைகளை ஆரம்பிப்பது என முடிவு செய்யும்போது, மாணவர்களுக்கான போக்குவரத்து சேவையில் தனி நபர் இடைவெளியைப் பேண முடியாத சூழ்நிலை ஏற்படும்.

இதற்கு மேலாக, அதிக மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளாலும் எதுவும் செய்ய முடியாத நிலை ஏற்படுவதும் தவிர்க்க முடியாததே.

இத்தகையதொரு சூழமைவில் பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ளன.

மத்திய கல்வி அமைச்சின் அறிவிப்பைப் பார்க்கும்போது, பாடசாலை அதிபரின் தலையில் பெரும் சுமை ஏற்றப்படுவது தெரிகிறது.

பாடசாலைகள் தொடர்ந்து இயங்காமல் இருக்கும்போது, மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும் என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

அதேநேரம் கொரோனாத் தொற்று சமூகத்தில் வேகமாகப் பரவி இருக்கும்போது பாடசாலைகளை ஆரம்பிப்பது நனைத்துச் சுமப்பதாக ஆகிவிடுமோ என்ற ஏக்கத்தைத் தரவே செய்யும்.

குறிப்பாக இரண்டாயிரம் மாணவர்களைக் கொண்ட பாடசாலை ஒன்றில் ஒரு மாணவனுக்கு கொரோனாத் தொற்று இனங்காணப்பட்டால்,

அதன் விளைவு என்ன என்பது பற்றிச் சிந்திப்பது கட்டாயமானதாகும்.

எனினும் இதுபற்றிய எண்ணப்பாடுகள் அரசாங்கத்திடம் இருப்பதாகத் தெரியவில்லை.

அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்கு கொரோனாத் தொற்றுடன் வாழ வேண்டியிருக்கும். இதற்கு மக்கள் தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்வதுதான் ஒரே வழி என்பது சுகாதார அமைச்சின் முடிந்த முடிவு.

ஆக, பாடசாலைகள் ஆரம்பமாகிய நிலையில் மாணவர்களுக்கு தொற்று ஏற்பட்டால், அதனை ஏற்றுக் கொண்டு வாழப் பழகுதல் என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்துவிட்ட பின்னர், எவரும் எதுவும் செய்ய முடியாது.

எனினும் பாடசாலைகள் ஆரம்பமாகும்போது, மாணவர்களைப் பாதுகாப்பது என்ற விடயத்தில் அதீத கவனம் செலுத்துவது ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும்.

ஆகவே கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்கான அத்தனை ஏற்பாடுகளையும் பாடசாலைகள் நூறு வீதம் பின்பற்ற வேண்டும் என்பதுதான் இங்கு வலியுறுத்தப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

# சோறு, புட்டு, வடை சாப்பிட்ட மக்களுக்கு பீட்சா சாப்பிட வாய்ப்பை வழங்கினோம்

## நீதிமன்றில் வடக்கு மக்கள் தொடர்பில் யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி

(யாழ்ப்பாணம்)

போரை முடிவுக்குக் கொண்டு வந்ததன் ஊடாக சோறும் புட்டும் வடையும் சாப்பிட்டுக் கொண்டிருந்த வடக்கு மாகாண மக்களுக்கு பீட்சா சாப்பிடும் நிலையை உருவாக்கினோம் என்று யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தலைமைப் பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் மன்றுரைத்தார்.

அவரது கருத்துக்கு கடும் ஆட்சேபனை வெளியிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்,

"சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையை மீறி வடக்கு மாகாண மக்களை இழிவாகப் பேசுகிறார்.

10 ஆண்டுகளாக மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும் நான் வடக்கு மக்களைப் பேசுவதற்கு இவர் யார் எனக் கேட்கின்றேன்" என்றார்.

அதனால் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியைக் கண்டித்த மன்று, அவரைக் கட்டுப்படுத்தியது.

யாழ்ப்பாணம் நீதிமன்ற நியாயாதிக்கத்துக்குள் இன்று 21 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதிக்கு இடையே இலங்கை குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை 106ஆம் பிரிவின் கீழ் பொதுத் தொல்லை என்ற வியாக்கியானத்தின் கீழ் விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸார் தாக்கல் செய்தனர்.

அந்த வழக்கிலேயே யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தலைமைப் பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ, தனது சமர்ப்பணத்தில் இவ்வாறு குறிப்பிட்டார்.

"உயிரிழந்த உறவுகளை நினைவு கூருவதற்கு வருடாந்தம் 365 நாட்கள் உள்ளன. ஏன் நவம்பர் 21ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை மட்டும் நினைவு கூரவேண்டும்.

விடுதலைப் புலிகள் அமைப்பினால் கூறப்பட்டதனால்தான் அந்த வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது" என்று குறிப்பிட்ட யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், தியாக தீபம் திலீபன் உள்ளிட்டோருக்கு நினைவேந்தல் நடத்திய ஒளிப்படப் பிரதியை சான்றாக முன்வைத்தார்.

அதில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் காணப்படுவதால் அவருக்குதான் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும். ஏன் எங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்கின்றனர் என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கேள்வி எழுப்பினார். (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 22 ஆம் திகதி ஞாயிறு காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** மருதனார்மடம், அம்பலவானர் வீதி, சபாபதிப்பிள்ளை வீதி, இராமநாதன் நுண்கலைப்பீடம், நாவலடி பிரதேசம் (வியாபாரிமூலை), பலாலி வீதியில் வேம்படி சந்தியிலிருந்துமுலவைசந்திவரை, புகையிரத நிலைய வீதி, மார்ட்டின் வீதி, 1ம் குறுக்கு வீதி, 2ம் குறுக்கு வீதி, 3ம் குறுக்கு வீதி, 4ம் குறுக்கு வீதி, Green grass Hotel, புகையிரத நிலையம், டான் தொலைக் காட்சி ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** உருத்திரபுரம் வீதி பிரதேசம், சம்மந்தன் அரிசி ஆலை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** திருநாவற்குளம், நொச்சிமோட்டை, புதிய சின்னக்குளம், பரநாட்டாங்கல், கொக்கெலிய இராணுவ முகாம், தாண்டிக் குளத்திலிருந்து கல்மடு வரை, மறக்கறம்பளையிலிருந்து மணிபுரம் வரை, நொதேர்ண் பண்ணை, புதுக்குளம் நீர்ப்பாசன சபை, ICT மறக்கறம்பளை சமயபுரம் வரண் அரிசி ஆலை, தாண்டிக்குளம் நீர்ப்பாசன சபை, புதிய பேருந்து தரிப்பிடம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** முருங்கன்பிட்டி, பள்ளகாமம், டொன்பொஸ்கோ, காக்கையங் குளத்திலிருந்து கீரிசுட்டான் வரை, இரணையிலுப்பைக்குளத்திலிருந்துசின்ன வலயங்கட்டு வரை மின் தடைப்படும்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2020

**"இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது, மரங்கள் என் கோயில்கள், காடுகள் என் தேவாலயங்கள்."**
**-மிகைல் கோபர்ச்சேவ்**
**(சோவியத் யூனியனின் முன்னாள் ஜனாதிபதி)**

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## வலிமை பற்றிச் சிந்தியுங்கள்

❖ இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக் கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவை.

❖ பெரியவர்கள் பெருந்தியாகங்களைச் செய்கிறார்கள், அதன் விளைவாக வரும் தன்மைகளை மனிதகுலம் பெற்று அனுபவிக்கிறது.

❖ இந்த உலகம் மிகப் பெரிய ஓர் உடற்பயிற்சிக்கூடம், இங்கு நாம் நம்மை வலிமையுடையவர்களாக ஆக்கிக் கொள்ள வந்துள்ளோம்.

❖ பலவீனத்திற்கான பரிகாரம், ஓயாது பலவீனத்தைக் குறித்துச் சிந்திப்பதல்ல, மாறாக வலிமையை குறித்துச் சிந்திப்பதாகும்.

❖ அனைத்துவிதமான அறிவும் மனிதனுக்குள் இருக்கிறது என்று வேதாந்தம் சொல்கிறது, இந்த அறிவை விழித்து எழும்படிச் செய்வது தான் ஆசிரியருடைய வேலை.

❖ அனைத்து ஆசைகளையும் சமுதாயத்தின் நன்மையை முன்னிட்டு எப்போதும் உன்னால் தியாகம் செய்யமுடிகிறதோ, அப்போது நீ புத்தராகி விடுகிறாய்.

❖ உண்மை இல்லாதவற்றில் எச்சரிக்கையாக இருப்பதுடன், உண்மையில் பிடிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும்.

# வரவு-செலவுத்திட்ட உரை- 2021




**ஓய்வூதியங்களின் பெறுகைகளுக்காக வருடந்தோறும் ரூபா 50 மில்லியனுக்கு அதிகமான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

சம்பளங்கள் அல்லது வட்டிகள் போன்ற வருமான மூலங்களிலிருந்து மாதமொன்றுக்கு 250,000 ரூபாவினை விஞ்சிய வருமானம் பெறுநர்கள் தமது நிலுவைத் தொகையினைச் செலுத்தும்படி அவர்கள் தொழிலிடங்களுக்கு அல்லது வங்கிகளுக்கு அறிவுறுத்தல் வழங்க முடியுமென்பதுடன் வருட இறுதியில் நிதி வருமான அறிக்கையொன்றின் மூலம் தமது வரிப் பொறுப்புக்களை பரிசீலனை செய்வதற்கு இலகுவான முறைமையொன்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்படும்.

அடுத்த ஐந்து வருடங்களின் போது, விவசாயத் துறை, மீன்பிடி மற்றும் விலங்கு வேளாண்மை உள்ளடங்களான பண்ணையிலிருந்து சம்பாதிக்கும் இலாபம் மற்றும் வருமானம் அடுத்த 5 வருடங்களுக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும். தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பணிகளுக்கான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சம்பாத்தியங்கள் அத்துடன் நாட்டிலோ அல்லது நாட்டுக்கு வெளியிலோ வதியும் போது சம்பாதிக்கின்ற வெளிநாட்டு வருமானங்கள் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

அரசாங்கத்தினால் பெறப்படும் நேரடி வரிகளில், 80 சதவீதமானவை உயர் வருமான மற்றும் பெரியளவிலான வியாபாரங்கள், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிலிருந்து கிடைக்கப் பெறுகின்றன.

2013/2014 இல் நான் அறிமுகப்படுத்திய வரு மான நிருவாக மற்றும் முகாமைத்துவ முறைமை (RAMIS) திட்டத்திற்கு அவசியமான சட்ட ரீதியான மற்றும் தொழில்நுட்ப ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் முகாமைத்துவ நோக்கங்களுக்காக பெரிய வரி செலுத்துநர் அலகின் கீழ் பிரிக்கப்பட்டுள்ள பல்வேறு பிரிவுகளை ஒருங்கிணைப்பதன் மூலம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் நேரடிப் பொறுப்பின் கீழ்வரும் வரி செலுத்துநர்களை இலக்காகக் கொண்ட வரி சேகரிப்பு நிருவாகத்தினை வலுப்படுத்துவது அவசியமாகும்.

இலகுபடுத்தப்பட்ட வரி முறைமைப் பின்னணியில் சுய இணக்கப்பாட்டினை அதிகரிப்பதன் அவசியம், வரிக் கணக்காய் வினை வலுப்படுத்தல் மற்றும் இலகுபடுத்தப்பட்ட வரிமுறைமையொன்றுக்குள் வரி வருமானத்தினை அதிகரித்தல் என்பவற்றுக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் அவசியமான மாற்றங்களை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

வரி செலுத்துநர்களைப் பிரதி நிதித்துவப்படுத்தும் தனியார் வரி ஆலோசகர்கள் மற்றும் கணக்காய்வாளர்கள் மோசடியான வரி அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் சான்றுப்படுத்தலை தடுக்கின்ற சட்ட ஏற்பாடுகளை அறிமுகம் செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

## சேமிப்புகள் மற்றும் முதலீடுகள்

மக்களின் வாழ்வாதாரத்தினை அதிகரிப்பதற்கான எமது முயற்சியுடன் விசேட சேமிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றினை செயற்படுத்துவதற்கு நாம் தலைமை வகித்தல் வேண்டும். விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கான சமுர்த்தி மற்றும் ஓய்வூதியங்களின் பெறுகைகளுக்காக வருடந் தோறும் ரூபா 50 மில்லியனுக்கு அதிகமான தொகை ஒதுக்கீடு செய்யபட்டுள்ளது. எவ்வாறாயினும், வயோதிப காலத்தில் அல்லது விசேட தேவைகளுக்காக பயன்படுத்துவதற்கு போதிய வருமானத்தினை உறுதிப்படுத்தும் சேமிப்பு காணப்படவில்லை எனவே, ஒவ்வொரு சமுர்த்தி பயனாளிக்கும் சமுர்த்தி ஆயுள் சேமிப்பு கணக்கொன்றினைத் திறப்பதற்கும் சமுர்த்திக் கொடுப்பனவினை சமுர்த்தி வங்கியினால் அக்கணக்கில் வைப்புச் செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

நிலையான சேமிப்பு மீதிகளை தேசிய சேமிப்பு வங்கிக் கணக்கில் வைப்பாகவும் பிணையாகவும் இடுவதன் மூலம் சமுர்த்தி பயனாளிகளின் சேமிப்பினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்தகைய சேமிப்புகள் ஊழியர் சேமலாப நிதியத்தில் பாதுகாப்பான முதலீடு என்பதனை உறுதிப்படுத்துவதற்கு திறைசேரி முறிகளில் முதலீடு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும். அத்தகைய முதலீடுகளின் வட்டி வருமானம் அனைத்தினையும் வரிகளிலிருந்து விடுவிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

சமுர்த்தி வங்கிகளினால் அரச வங்கிகளில் இடப்பட்ட வைப்புகளில் 90 சதவீதத்தினைப் பயன்படுத்தி சமுர்த்தி பயனாளிகளின் வீட்டுப் பொருளாதாரம் மற்றும் தொழில் முயற்சிகளை அதிகரிக்கும் வகையில் 7 சதவீத வருடாந்த வட்டியில் புதிய சமுர்த்தி தொழில்முயற்சி கடன் திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

நலன்புரிச் சங்கங்கள் மற்றும் நிறுவனங்களின் சேமிப்புகளை ஊக்குவிக்கும் வகையில் முன்னைய அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டவாறு அச் சங்கங்களின் வட்டி வருமானம் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

தனியார் சேமிப்புகளை ஊக்குவிப்பதற்கு, மருத்துவ காப்புறுதி, வீடமைப்பு கடன்களுக்கான வட்டி, அரசாங்க பிணையங்களில் முதலீடு மற்றும் மாதத்திற்கு ரூபா 100,000 வரை செலவிடும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்குகள் என்பவற்றை ஆள்சார் வருமான வரி கணிப்பீட்டில் கழிப்பனவு செய்யமுடியுமான செலவினங்களாகக் கருதுவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இலங்கையில் தங்கியிருந்து சேவையாற்றுகின்ற வெளிநாட்டவர்கள் இலங்கையில் சம்பாதிக்கும் அந்நியச் செலாவணி அல்லது வெளிநாடுகளிலுள்ள தமது சம்பாத்தியம் அல்லது இலங்கைக்கு வெளியே வங்கிக் கடன்களின் மூலம் சொகுசு தொடர்மாடி வீடுகளை கொள்வனவு செய்வதற்கு வசதியளிப்பதற்கு முன்மொழிகின்றேன்.

பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக் குழுவினால் ஒழுங்குறுத்தப்படும் இலங்கை மெய்ச் சொத்து முதலீட்டு நம்பிக்கைப் பொறுப்பினூடாக (SLREIT) வீடமைப்புச் சந்தையில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு, அத்தகைய முதலீடுகளை மூலதன ஈட்டு வரியிலிருந்து விலக்களிப்பதற்கும், பங்குலாபங்களை வருமான வரியிலிருந்து விடுவிப்பதற்கும் முத்திரைத் தீர்வையினை 0.75 சதவீதமாகக் குறைப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் உள்ளூர்க் கம்பனிகளின் பிரவேசத்தினை ஊக்குவிக்கும் வகையில், 2021. டிசெம்பர் 31 இற்கு முன்னர் பட்டியலிடப்படுகின்ற கம்பனிகளுக்காக 2021/2022 வருடங்களுக்காக வரிச் சலுகையினை 50 சதவீதமாக வழங்குவதற்கும் அடுத்துவரும் மூன்று வருடங்களுக்கான நிறுவன வரி வீதத்தினை 14 சதவீதமாக பேணுவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

ஆதனமொன்றின் விற்பனை விலை அல்லது மதிப்பிடப்பட்ட பெறுமதி இரண்டிலும் பெறுமதி கூடியதன் மீதான வரியாக மூலதன ஈட்டு வரியினை இலகுபடுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

வெளிநாட்டுக் கம்பனிகளின் பங்குலாபங்கள் அவற்றினது வியாபாரங்களை விரிவாக்குதல், நிதி அல்லது பங்குச்சந்தை அல்லது இலங்கை சர்வதேச இறைமை முறிகள் என்பவற்றில் முதலீடு செய்யப்படுமாயின், அவற்றின் பங்குலாபங்கள் மீதான வரியினை மூன்று வருடங்களுக்கு குறைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

ஆகக் குறைந்தது ஐ.அ.டொ 100 மில்லியன் பெறுமதியான இலங்கை சர்வதேச இறைமை முறிகளை உள்நாட்டு வணிக வங்கிகள் கொள்வனவு செய்கின்ற சந்தர்ப்பத்தில், இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல்களின் கீழ் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட ஏற்பாடுகளை மூன்று வருடங்களுக்கு நிறுத்திவைப்பதற்கும் குறித்த முதலீட்டின் மூலதன இலாபங்கள் மற்றும் வட்டி வருமானத்தினை வரிகளிலிருந்து விலக்களிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

ஏற்றுமதிக் கைத்தொழில்கள், பாற்பண்ணை, ஆடை, சுற்றுலா, விவசாய உற்பத்திகள், செயன்முறைப்படுத்தல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளினூடாக பொருளாதாரத்தின் கட்டமைப்பு மாற்றங்களுக்கு பங்களிக்கின்ற ஐ.அ.டொ 10 மில்லியனை விஞ்சுகின்ற முதலீடுகளுக்கு உபாய அபிவிருத்திச் சட்டங்களின் கீழ் ஆகக் கூடியது 10 வருடங்கள் வரை சலுகை வழங்கப்படும்.

சர்வதேச வர்த்தகத்தில் மொத்த பொருட்கள் பரிமாற்றுகை மத்திய நிலையமாக கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டையினை ஊக்குவிக்கும் வகையில் சுங்க பிணைக்கு தங்கள் மீதான முதலீடுகளை ஊக்கு விப்பதனுடன் குறித்த பிணைக் குதங்கள் மீதான வாடகைக் கட்டணங்கள் மற்றும் அனைத்து வரிகளிலிருந்தும் அத்தகைய முதலீடுகள் விலக்களிக்கப்படும்.

## தேசிய பாதுகாப்பு

நமது முப்படை வீரர்களின் தொழில்முறை திறன்களை மேம்படுத்துவதற்கும், அவர்களுக்கு நவீன தொழில்நுட்ப வசதிகளை வழங்குவதற்கும் தேசிய பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்துடன் ஒரு இடைக்காலத் திட்டம் தயாரித்தல் தற்போது நடந்து வருகிறது.

இந்த நடுத்தர கால முதலீடு நாட்டின் வளத் தடை கள் மற்றும் நமது முன்னுரிமைகள் ஆகியவற்றைக் கண்டறிவதன் மூலம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். போதைப்பொருளை எதிர்த்துப் போராடுவதிலும், சர்வதேச சட்டவிரோத போதைப் பொருள் வர்த்தகத்திற்கான மையமாக மாறிவரும் நமது நாட்டின் அச்சுறுத்தலை நீக்குவதிலும், பொருட்களின் கடத்தலைக் கட்டுப்படுத்துதல் மீன்பிடி வளங்கள் மற்றும் மீன்வள சமூகத்திற்கு தேவையான பாதுகாப்பை வழங்குதல் மற்றும் இந்து சமுத்திரத்தில் எமது பணிகளைச் செய்வதற்கு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு இலங்கை கடற்படையை மேலும் வலுப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இலங்கை இராணுவம் மற்றும் விமானப்படையினர் அனர்த்த முகாமைத்துவம் உட்பட அவர்களால் ஆற்றப்பட்ட பல பணிகள் தொடர்பில் அவர்களின் நீண்டகால உள் கட்டமைப்பு தேவைகளை நாங்கள் கவனத்திற்கொள்ள வேண்டியிருந்தது. நடுத்தர மற்றும் நீண்ட கால திட்டமிடல் கட்டமைப்பில் அடையாளம் காணப்பட்ட அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு முப்படையினருக்கு ரூபா 20,000 மில்லியனை மேலதிக ஏற்பாடுகளாக ஒதுக்குவதற்கு முன்மொழிகிறேன்.

(தொடரும்)

## துன்னாலையில்...

பொலிஸார் இணைந்து குறித்த சுற்றி வளைப்பினை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த சுற்றிவளைப்பின்போது நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 4 பேர் கைது செய்யப்பட்டதுடன், எந்தவிதமான அனுமதிப்பத்திரங்களுமற்ற 4 வாகனங்கள் கைப்பற்றப்பட்டது. (ம-3,60)

## சனி, ஞாயிறு...

தாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பரம்பலைக் கட்டுப்படுத்த மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்க்கும் வகையில் அரசினால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதனால் வார இறுதி நாட்களான சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் தொடருந்து சேவைகள் இடைநிறுத்தப்படுவதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-3)

## சமரசம் பேச...

கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்பு பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, சிதம்பரபுரம், கற்குளம் 4ஆம் பகுதியில் வசித்து வந்த குடும்பம் ஒன்றின் கணவன் மனைவிக்கு இடையில் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக பிரிந்து வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் தனது மனைவியுடன் தகராறு தொடர்பில் கதைப்பதற்கு பெண் வீட்டிற்கு கணவன் நேற்று சென்றுள்ளார்.

அங்கு இரு தரப்பும் கதைத்துக் கொண்டிருந்தபோது வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது குறித்த குடும்பஸ்தர் தனது மனைவி, மாமி, மாமியாரின் தாயார் ஆகியோருக்கு கத்தியினால் குத்திய நிலையில் அவர்கள் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் காயமடைந்த பெண்ணின் கணவரான 32 வயது குடும்பஸ்தர் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-3)

மஹஜன சம்பத
திகதி 2020/11/20
சீட்டிழுப்பு இலக்கம் 4312
ஆங்கில எழுத்து J
வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 1 8 3 1 9

தன நிதானய
திகதி -2020.11.20
சீட்டிழுப்பு இலக்கம் -349
P 13 20 29 61

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 20-11-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2607
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 04 10 41 59

மெகா பவர்
திகதி 20/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0679
I 19 08 10 23 42

## 4 மோட்டார் சைக்...

அத்துமீறி ஆயுதங்களுடன் நுழைந்த குழுவொன்று வீடு மற்றும் வாகனம் ஆகியவற்றுக்கு சேதம் விளைவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 7.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

4 மோட்டார் சைக்கிள்களில் வந்த குழுவொன்று வீட்டிற்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனத்தின் கண்ணாடிகளை அடித்து நொருக்கியதுடன், வீட்டின் முன்பக்க கண்ணாடிகளையும் அடித்து சேதப்படுத்திவிட்டு தப்பித்துச் சென்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-3,30)

## 20 ஆயிரத்தை...

என்று நேற்று வெள்ளிக்கிழமை இரவு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம்நாட்டில்கோவிட்-19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 74ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பு-2ஐச் சேர்ந்த 70 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை நேற்று மட்டும் 435 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டில்ஜனவரிமாதம்முதல்நேற்று வரை 19 ஆயிரத்து 276 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## வலி.கிழக்கு...

ஷக்கு எதிராக அச்சுவேலிப் பொலிஸாரினால் மாவீரர் நாள் அனுஷ்டிப்புத் தொடர்பில் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் மாவீரர் நாள் அனுஷ்டிப்புத் தொடர்பில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளருக்கு தடை உத்தரவு ஒன்றினை வழங்குமாறு அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் விண்ணப்பம் செய்யப்பட்டது.

இதன் பிரகாரம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மல்லாகம் நீதவான் நீதிமன்றிற்கு சமுகமளிக்க வேண்டும் என்ற கட்டளை நீதிமன்ற கட்டளைப்பதிவாளரினால் அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஊடாக அழைப்பாணை சேர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## உட்கார்ந்து...

சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அதனடிப்படையில் வடக்கு மாகாணத்தில் உள்ள உணவகங்களின் இருக்கைகளுக்கு (இடவசதிக்கு) ஏற்ப 50 சதவீத மானவர்கள் உட்கார்ந்து உணவு உட்கொள்ள முடியும் என்று அவர் சுட்டிக் காட்டினார். (ம-3)

## கிளிநொச்சி...

மாவீரர் நாள் நினைவேந்தல்களை அனுஷ்டிக்கக்கூடாது என்று பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் உள்ளிட்டோருக்கு கிளிநொச்சி நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு மாவட்ட அலுவலகமான அறிவகத்திற்கு நேற்றுக் காலை சென்ற கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பொறுப்பதிகாரி நீதிமன்ற கட்டளையை வழங்கியுள்ளார்.

மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர் தின நிகழ்வுகளை மேற்கொள்வதற்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நீதிமன்றில் இந்த தடை உத்தரவு நேற்றைய தினம் பிறப்பிக்கப்பட்டுள்ளதோடு முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, மாங்குளம், மல்லாவி ஆகிய 5 பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் நீதிமன்றத்தில் குறித்த தடை உத்தரவுகளை பெற்றிருக்கிறார்கள்.

அத்தோடு குறித்த ஐந்து பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இருந்து அரசியல் பிரமுகர்கள் மற்றும் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுத் தலைவர் உட்பட குழுவுக்குமாக 41 பேருக்கு தடை உத்தரவுகள் பெறப்பட்டிருக்கிறது. (ம-3,100,281)

## மாவீரர் நாளுக்கு தடை...

நடத்த தடைவிதிக்கக் கோரி மல்லாகம் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காங்கேசன்துறை பொலிஸார் மனுத் தாக்கல் செய்தனர்.

அதனடிப்படையில் குறித்த மனு மீதான விசாரணை நேற்றைய தினம், மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் இடம்பெற்றது.

பொலிஸாரினால் மனுவில் குறிப்பிடப்பட்டு இருந்த இலங்கை தண்டனைச் சட்டக்கோவை 106ஆம் பிரிவின் கீழான சட்ட ஏற்பாடுகளை மீறாதும், இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களில் கூறப்பட்ட தடை செய்யப்பட்ட இயக்கங்களின் சின்னங்கள், கொடிகள் உள்ளிட்டவற்றை பயன்படுத்தாமலும், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறாமலும் நிகழ்வுகளை நடத்த முடியும் என்றும் அதனை மீறினால் மீறுபவர்களை கைது செய்யுமாறும் கட்டளையில் குறிப்பிட்டார்.

அத்துடன், பொதுக் கூட்டங்களை நடத்துவதனால் பிரிவின் பிரதேச மருத்துவ அதிகாரியின் அனுமதியுடனேயே முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் நீதவான் உத்தரவிட்டார். (ம-3,18)

## தீக்...

பெண்ணொருவர் சிகிச்சை பலன் இன்றி நேற்று உயிரிழந்துள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் நாவாந்துறை பகுதியினை சேர்ந்த சுதாகரன் மேரி கெமினா (வயது-38) என்ற 3 பிள்ளைகளின் தாயாராவார்.

கடந்த 17ஆம் திகதி தீக்காயத்துக்குள்ளான குறித்த பெண் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை யாழ். போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## மாவீரர் நாளுக்கு...

ரணைக்கு உட்படுத்த முடியுமா என எதிர்த்தரப்பு வாதிகள் சார்பில் ஆஜராகிய சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள், சட்டத்தரணிகள் மன்றில் எழுப்பிய கேள்வியின் அடிப்படையில் அது தொடர்பான நீண்ட நேர விவாதம் இடம் பெற்றது.

இதனை ஆராய்ந்த நீதிபதி, மேல் நீதிமன்றத்தில் குறித்த மனுக்கள் மீது விசாரணை நடத்த முடியாது எனத் தெரிவித்து அதனைத் தள்ளுபடி செய்தார்.

மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகளான கேசவன் சயந்தன், விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். (ம-3,101)

## வீடுகளில்...

நினைவேந்தல்களை செய்வதற்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளதாக சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மாவீரர் நாள் நிகழ்வுகளைத் தடை செய்யக் கூடாது எனக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்டமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-3,101)

## மாவீரர் வாரம்...

கூரும் மாவீரர் வார நினைவேந்தல் நிகழ்வுகள், தமிழர் தாயகமான வடகிழக்கு மண்ணில் இன்று ஆரம்பமாகின்றன.

கடந்த ஆண்டு தாயக தேசத்தில் பெரும்பாலான மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர் நாள் நினைவேந்தல்கள் கடைப்பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1282 நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 20.11.2020 தினம் வெள்ளி
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
M 10 29 47 75
SUPER 500 2 5 9 6

Z 08 15 26 60
சீட்டிழுப்பு வாரம் 653
பச்சை
20.11 2020
வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,169,135
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி
கிழமை: வெள்ளி
சீட்டிழுப்பு இல: 1108
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 20.11.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 85,167,080
வெற்றி இலக்கங்கள் 06 33 40 65 U
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: வெள்ளி
சீட்டிழுப்பு இல: 3438
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 20.11.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 32,838,086
வெற்றி இலக்கங்கள் 11 27 43 63 L
ரூ 500/- 3781
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 27,96,402/=
திகதி: 20.11.2020
வெற்றி வாரம்: 2989
வர்ணம்: கடும் நீலம்
வெற்றி இலக்கங்கள் 08 10 26 40
இடபம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,860,660

# தேவைகள் நிறைவேறியபின் மக்களை அரசு கைவிட்டுள்ளது

## சபையில் சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்த ஆட்சியாளர்களின் தேவைகள் நிறைவேறிவிட்டதால், மக்கள் மீதான அக்கறை அவர்களிடத்தில் இல்லாமல் போய்விட்டது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேர்தல் காலத்தில் அரசால் மக்கள் முன் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும் விடயங்கள் எதனையும் வரவு - செலவுத் திட்டத்தில் காண முடியவில்லை. இதன்படி மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்ற நோக்கம் ஆட்சியாளர்களிடம் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை, 20ஆவது திருத்தச் சட்டம் ஊடான அதிகாரங்கள் உள்ளிட்ட தமக்கு தேவையானவற்றை நிறைவேற்றிக் கொண்ட பின்னர் மக்கள் இருந்தாலும் ஒன்றே, இல்லாவிட்டாலும் ஒன்றே என்ற எண்ணத்தில் இந்த அரசின் செயற்பாடுகள் காணப்படுகின்றன.

இதேவேளை, வரவு - செலவுத் திட்டத்தில் கொரோனாவைத் தடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் உள்ளடக்கப்படவில்லை. கொரோனா தடுப்பு மருந்தைக் கொள்வனவு செய்வதற்காக உலக நாடுகள் போட்டி போட்டுக் கொண்டிருக்கையில், இலங்கை அரசு அதனைக் கொள்வனவு செய்ய முயற்சிக்காது இருப்பது ஏன்?

இந்த நிலைமையில், அரசு கொரோனாவைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கையில் ஈடுபட முயற்சிக்கின்றது என்றார். (ம-03)

# பாராளுமன்ற உத்தியோகத்தர்களை ஏற்றிச் சென்ற பேருந்து குளத்திற்குள் கவிழ்ந்தது

(கொழும்பு)

பாராளுமன்ற உத்தியோகத்தர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று நேற்று பிற்பகல் பாராளுமன்ற வளாகத்தில் உள்ள ஒரு குளத்திற்குள் விழுந்து விபத்திற்குள்ளானது.

விபத்து நடந்த நேரத்தில் பஸ்ஸில் கிட்டத்தட்ட 30 பேர் பயணம் செய்து கொண்டிருந்தனர். மதியம் பெய்த பலத்த மழையால், சாரதி சரியாக வீதியை கவனிக்காததால் விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தினால் சிலருக்கு சிறு கீறல் காயங்கள் ஏற்பட்டன.

பேருந்து சாரதியும், நடத்துநரும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (ம-03)

# ஐ. நாவிலிருந்து வெளியேறியமை கவனிக்கப்பட வேண்டியது

## ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்திலிருந்து இலங்கை வெளியேறியமை முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

எனினும் பன்முக சமூகங்கள் மத்தியில் சமாதானம், ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் நீதியை ஊக்குவிப்பதற்குத் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படத் தயாராக இருப்பதாக அரசாங்கம் தெரிவித்திருப்பதால் அதற்கு அவசியமான உதவிகளை வழங்க தயாராக உள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்திருக்கிறது.

ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து மற்றும் ரூமேனியா தூதரகங்கள் இணைந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

இதுகுறித்த தனது நிலைப்பாட்டை அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் அறிவித்திருந்தது. எனவே இதற்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் என்பதுடன் அதற்கு சட்டம், நீதி மற்றும் துடிப்பான சிவில் சமூகம் போன்றவை அத்தியாவசியமானவையாக அமைந்துள்ளன என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். எமது பகிரப்பட்ட சர்வதேச அர்ப்பணிப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் பிரகாரம் இலங்கையுடன் ஆழமான ஈடுபாட்டைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கும் எதிர்பார்க்கின்றோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)


## காணிகள் தேவை

யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர் பிரதேச செயலக எல்லைகளுக்குள் 20 பரப்பு தொடக்கம் 50 பரப்பு வரையான காணி தேவை.

( தரகர் தேவையில்லை. ) (4701)

076 221 2037

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை, நவாலி வீதி மெயின் றோட்டுடன் 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது.

1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

(தரகர் தேவையில்லை.)

( ஆனைக்கோட்டைச் சந்தியில் இருந்து 70 மீற்றர் தூரம்.) (4701)

077 623 4204, 077 288 0152

## குங்குமம் திருமாங்கல்ய சேவை

எங்கள் குங்குமம் திருமாங்கல்ய சேவையினூடாக உங்கள் பிள்ளைகளின் மணவாழ்வினை மங்கல வாழ்வாக்கிக் கொள்ளுங்கள். (4690)

077 572 9724, 076 788 9697

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK- 1025 /=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-505)

## அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் 1150/=

லண்டன் 1050/= இத்தாலி 1250/=

5kgக்கு மேல் 11kgக்கு மேல் 21kgக்கு மேல் கட்டணம் குறைவு (C-705)

மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை

கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1350/= (வரி உள்ளடக்கப்படவில்லை)

உங்கள் இடங்களுக்கு வந்து பொதிகள் பெற்றுக் கொள்ளப்படும். (கட்டணம் வேறுபடும்)


பொதிகளுக்கு 20,000ரூபா பெறுமதி வரையான காப்புறுதிக் கட்டணம் இலவசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது

எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்பு கொள்ளவும்

070 330 5500 077 888 9388 075 330 5500

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை சண்டிலிப்பாய் சுன்னாகம் | நெல்லியடி ஆவரங்கால் சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கிளிநொச்சி வவுனியா மன்னார் | கனகராயன்குளம் மல்லாவி துணுக்காய்


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 24.02.1941

விண்ணில் 15.11.2018

அமரர்

### நவரத்தினம் புண்ணியமூர்த்தி

நீங்கள் இல்லாத உலகம் என்றும் இருள் மயமானது
எங்கே காண்போம் உங்கள் மலர்ந்த முகத்தை
உங்கள் பிரிவைத் தாங்குமா எங்கள் இதயம்...
ஒவ்வொரு நொடியிலும் இதயத்தின்
துடிப்பைப் போல உணர்கின்றோம்..
நீங்கள் கடந்து சென்றாலும் எங்கள் அருகில் – நீங்கள்
இருப்பதை நாங்கள் உணர்கின்றோம்...

வைரவர் கோவில் வீதி,
நெல்லியடி கிழக்கு,
வதிரி, கரவெட்டி.

(4692)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்


## தும்பு மில் விற்பனைக்கு

- சுயதொழில் முயற்சியாளர்களுக்கான அரிய சந்தர்ப்பம்!
- மாதாந்தம் ரூபா 150,000/= இற்கு குறையாத வருமானம் ஈட்டக்க முடியும்.
- பளையில் குத்தகைக் காணியில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட தும்பு மில் (Chips) உடனடி விற்பனைக்கு.
- உற்பத்தி செய்முறை விளக்கங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளும் செய்து தரப்படும்.
- தொடர்ச்சியான பராமரிப்பு மற்றும் மேம்படுத்தல் ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- உற்பத்தித் திட்டம் மற்றும் உற்பத்தித் திட்டம் தொடர்பான விளக்கமும் தரப்படும்.

(4700)

JNS EXPORTS (PVT) LTD,
முகமாலை, பளை.

தொடர்புகளுக்கு : 076 008 6185


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.